ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஆற்றிய ஈதுல் ஃபித்ர் பேருரை பக்கம் 3

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவுசார் அற்புதங்கள் பக்கம் 10

ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் (தொடர்-9) பக்கம் 16

எஸ்ஸன்ஸ் ஆஃப் இஸ்லாம் இஸ்லாம் உண்மையான உயிருள்ள மார்க்கம் பக்கம் 19



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | March 2025 | Vol. 4 - Issue No. 4



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311






# திருக்குர்ஆன்

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ كُتِبَ عَلَيْكُمُ ٱلصِّيَامُ
كَمَا كُتِبَ عَلَى ٱلَّذِينَ مِن قَبْلِكُمْ
لَعَلَّكُمْ تَتَّقُونَ ۙ

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோர் –களுக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் (ஆன்மிக, நல்லொழுக்கப் பலவீனங்களிலிருந்து) தவிர்ந்து கொள்ளலாம். (2:184)



# ஹதீஸ்

عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ
"إِنَّ فِي الْجَنَّةِ بَابًا يُقَالُ لَهُ الرَّيَّانُ،
يَدْخُلُ مِنْهُ الصَّائِمُونَ يَوْمَ الْقِيَامَةِ،
لاَ يَدْخُلُ مِنْهُ أَحَدٌ غَيْرُهُمْ يُقَالُ أَيْنَ
الصَّائِمُونَ فَيَقُومُونَ، لاَ يَدْخُلُ مِنْهُ
أَحَدٌ غَيْرُهُمْ، فَإِذَا دَخَلُوا أُغْلِقَ،
فَلَمْ يَدْخُلْ مِنْهُ أَحَدٌ ".

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சுவர்க்கத்தில் ஒரு வாசல் உள்ளது. அதன் பெயர் அர்ரய்யான் ஆகும். நோன்பாளிகள் அதன் வழியாக நுழைவார்கள். வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். நோன்பு வைத்தவர்கள் எங்கே என்று கேட்கப்படும். அவர்கள் எழுந்து நிற்பார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். அவர்கள் நுழைந்த பின்னர் அந்த வாசல் மூடப்படும். வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். (புகாரி ஹதீஸ் எண் 1846)

# ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 11.07.1918 அன்று டல்ஹவுஸியில் ஆற்றிய ஈதுல் ஃபித்ர் பேருரை

- ஈது என்பது இழந்ததை திரும்பப் பெறும்போது கிடைக்கும் மகிழ்ச்சிக்குப் பெயராகும்
- திருந்தி வந்த மகனுக்காக தந்தை கொடுத்த விருந்து
- அடியானின் மனந்திரும்புதலினால் இறைவன் பெறும் மகிழ்ச்சி
- உண்மையான பெருநாள் கொண்டாட இழந்த தக்வாவை மீண்டும் பெற வேண்டும்
- உண்மையான பெருநாள் இஸ்லாத்தின் முன்னேற்றத்தில் இருக்கிறது



தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா பஷீருத்தின் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் குத்பாவின் துவக்கத்தில் சூரத்துல் அஃலா (அதிகாரம் 87, வசனம் 1-20 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். பிறகு கூறினார்கள்:**

عِيْدٌ (ஈது) என்ற சொல் உருது, பாரசிகம், அரபு மொழிகளில் மகிழ்ச்சிக்காக உபயோகிக்கப்படுகிறது. ஆனால் இந்தப் பொருள் மரபுப் பொருளாகும். உண்மையில் عِيْدٌ (ஈது) என்ற சொல் عَوْدٌ (அவ்து) என்பதிலிருந்து உருவானதாகும். عَوْدٌ (அவ்து) என்றால், மீண்டும் திரும்பி வருதல் மற்றும் மீண்டும் மீண்டும் வரக்கூடியது என்று பொருள். மகிழ்ச்சிக்காக இந்த சொல் கையாளப்படுவதற்கு காரணம், மகிழ்ச்சியைப் பற்றித்தான் அது மீண்டும் மீண்டும் வர வேண்டும் என்ற ஆசை இருக்கும். துக்கம், தொல்லை, கஷ்டம், கவலை போன்றவற்றைப் பற்றி, அவை வர வேண்டும் என்றோ, மீண்டும் வர வேண்டும் என்றோ யாரும் விரும்புவதில்லை. மரணம், பிரிவு, நஷ்டம் போன்றவை வரவேண்டும் என எவரும் விரும்புவதில்லை. இதற்கு நேர்மாறாக, பையன் பிறக்க வேண்டும்; வியாபாரங்களில் இலாபங்கள் கிடைக்க வேண்டும்; நண்பர்களையும் அன்பர்களையும் சந்திக்க வேண்டும்; பகைவர்களிடமிருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்றுதான் மக்கள் விரும்புகின்றனர். இதனால்தான் மீண்டும் மீண்டும் வருதல் என்ற பொருளைக் கொண்ட عِيْدٌ (ஈது) என்ற சொல் மரபுத் தொடரில் கையாளப்பட்டது.

'ஈது' என்ற இந்த சொல்லில் இன்னொரு விஷயமும் தெளிவாகிறது. அதாவது, காணாமற்போன பொருள் திரும்பக் கிடைப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி வேறு எதிலும் ஏற்படுவதில்லை. உதாரணமாக, ஒருவருடைய வீட்டில் இலட்ச ரூபாய் இருக்கிறது. அது இருப்பது அவ்வளவு பெரிய மகிழ்ச்சியைத் தராது. அவருடைய சட்டைப் பையிலிருந்து காணாமற்போன பத்து ரூபாய் நோட்டு திரும்பக் கிடைப்பதால் ஏற்படும் மகிழ்ச்சியைப் போன்று அது இருக்காது. அவ்வாறே நீண்ட காலமாக விட்டுப் பிரிந்த ஒரு நண்பரின் சந்திப்பினால் ஏற்படும் மட்டில்லா மகிழ்ச்சி, எப்பொழுதும் பக்கத்தில் உட்காரக் கூடிய நண்பர்களையும், அன்பர்களையும் சந்திக்கும்போது ஏற்படாது. ஒருவருக்கு பத்து மகன்கள் இருந்து அவர்களில் ஒரு மகன் இறந்துபோய் விட்டார் என அவர் உறுதி கொண்ட பிறகு, திடீரென அந்த மகன் முன்னால் வந்து நின்றால், அவருக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. ஒன்பது மகன்கள் பத்திரமாக இருந்தபோது உருவான மகிழ்ச்சியை விட காணாமற்போன இந்த மகன் கிடைத்ததில் அதிக மகிழ்ச்சி ஏற்படும். ஏனெனில் இழந்ததைத் திரும்பப் பெறும்போது உருவாகும் மகிழ்ச்சி தனிப்பட்ட மகிழ்ச்சியாகும்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இஞ்சீலில் ஒரு சம்பவத்தை உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

"ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி, தகப்பனே! ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தர வேண்டும் என்றான். அதன்படி அவன் அவர்களுக்கு தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக் கொடுத்தான்.

சில நாட்களுக்குப் பின்பு, இளைய மகன் எல்லா –வற்றையும் சேர்த்துக் கொண்டு, தூர தேசத்திற்குப் புறப்பட்டுப் போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான். எல்லாவற்றையும் அவன் செலவழித்த பின்பு அந்தத் தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத் தொடங்கி அந்த தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக் கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான். ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை.



அவனுக்குப் புத்தி தெளிந்த போது, அவன், என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது. நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய், தகப்பனே! பரத்துக்கு விரோத –மாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல. உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன் என்று சொல்லி எழுந்து புறப்பட்டு தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும் போதே அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனை முத்தஞ் செய்தான்.

குமாரன் தகப்பனை நோக்கி, தகப்பனே! பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான். அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி, நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம்.

என் குமாரனாகிய இவன் மரித்தான். திரும்பவும் உயிர்த்தான். காணாமற்போனான். திரும்பவும் காணப் –பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்.

அவனுடைய மூத்த குமாரன் வயலில் இருந்தான். அவன் திரும்பி வீட்டிற்குச் சமீபமாய் வருகிறபோது, கீதவாக்கியத்தையும், நடனக் களிப்பையும் கேட்டு, ஊழியக் காரரில் ஒருவனை அழைத்து இதென்ன? என்று விசாரித்தான். அதற்கு அவன், உம்முடைய சகோதரன் வந்தார். அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான். அப்பொழுது அவன் கோபமடைந்து உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தி அழைத்தான். அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக, இதோ இத்தனை வருஷ காலமாய் நான் உமக்கு ஊழியஞ் செய்து ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந் –தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும் படி நீர் ஒருக்காலும் எனக்கு ஓர் ஆட்டுக் குட்டியையாவது கொடுக்கவில்லை.

வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப் போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்ரே என்றான். அதற்கு தகப்பன். மகனே! நீ எப்போதும் என்னோடிருக்கிறாய். எனக்குள்ளதெல்லாம் உன்னுடைய –தாயிருக்கிறது. உன் சகோதரனாகிய இவனோ மரித்தான்; திரும்பவும் உயிர்த்தான். காணாமற்போனான்; திரும்பவும் காணப்பட்டான். ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமே என்று சொன்னான் என்றார்." (லூக்கா 15:11–32)


ஆக, அந்த மகன் காணாமற்போய் திரும்பக் கிடைத்துள்ளார். எனவே, அவர் வந்ததில் இவ்வளவு பெரிய மகிழ்ச்சி கொண்டாடத்தான் வேண்டும் என்று தகப்பன் கூறுகிறார். இவருக்காவது பத்து மகன்கள் இருந்ததாக

வருகிறது. ஆனால் ஒருவருக்கு ஒரே மகன் இருந்து அவர் பல ஆண்டுகளாக காணாமற்போய் பிறகு அவர் திரும்பி வந்தால் அவருடைய தகப்பனாருக்கு எந்த அளவுக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்பதை கணித்துப் பாருங்கள்.

இயேசு கிறிஸ்து பல மகன்களில் ஒரு மகன் காணாமற்போய்விட்டதாகக் கூறுகிறார். ஏனெனில் இயேசு கிறிஸ்து முழு உலகத்திற்காகவும் எழுப்பப்படவில்லை. அன்னாரின் வருகை காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு மட்டுமாகவே இருந்தது. (மத்தேயு 15:24) இயேசுவின் சமுதாயம் உண்மையையும், நேர்வழியையும் விட்டகன்று காணாமற்போனவர்களாக இருந்தார்கள் என்றால், அந்தக் காலத்தில் உலகில் நன்மை, இறையச்சம், இறைவழிபாடு ஆகியவை காணப்பட்ட மற்ற சமுதாயங்களும் இருந்தன என்பதை இயேசுவின் மேற்கண்ட உதாரணம் குறிப்பிடுகிறது. அந்தத் தகப்பனின் பெரும்பான்மையான மகன்கள் நல்லவர்களாக இருந்ததாகவும், ஒரே ஒரு மகன்தான் சீர்கெட்டவனாகவும், ஆடம்பரக்காரனாகவும் இருந்தான் என்று இயேசுவின் உதாரணம் குறிப்பிடுகிறது. சீர்கெட்டவனாகவும் ஆடம்பரக் காரனாகவும் தன் சமுதாயத்தைப் பற்றித்தான் இந்த உதாரணத்தில் இயேசு குறிப்பிட்டிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் காலத்தில் நல்லவர்களும் இறையச்சம் கொண்டவர்களும் உலகில் பரவலாகக் காணப்பட்டார்கள். எனவே அவர்களின் உதாரணத்தில் ‘கரையும் கடலும் குழம்பிப் போயிருந்தன’ (திருக்குர்ஆன் 30:42) என்ற காட்சியைக் காண முடியவில்லை. இஸ்ரவேலர்கள் குழம்பிப் போயிருந்ததையே காண முடிகிறது.

ஆனால் அதற்கு நேர் மாற்றமாக, நமது ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் எல்லா உலக மக்களுக்காவும் அனுப்பப் –பட்டார்கள். அன்னாரின் போதனை எந்தவொரு நாட்டிற்கோ, சமுதாயத்திற்கோ மட்டுமன்று. காலத்தாலோ, இடத்தாலோ கட்டுப்படுத்தப்படாமல் எல்லா உலகத்திற்காக –வும் அனுப்பப்பட்டது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோன்றும் காலத்தில் கரையும் கடலும் குழம்பிப் போயிருந்தன. (30:42) என்ற காட்சி முழுமையாக இருந்தது.

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய உதாரணமும் இக்கருத்தை பிரதிபலிக்கக்கூடியதாக உள்ளது. அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதர் ஓர் ஒட்டகத்தில் ஏறி பயணம் செய்தவாறு நீண்ட காட்டில் சென்று கொண்டிருக்கிறார். அந்தக் காட்டைக் கடந்து செல்வதற்கு இந்த ஒட்டகத்தைத் தவிர வேறு வழியில்லை என்பதை அவர் அறிவார். தற்செயலாக அந்த ஒட்டகம் காணாமற்போய் விடுகிறது. அவர் அமைதி குலைந்தவராக அதனைத் தேடித்திரிகிறார். கடைசி வரை அது




கிடைக்கவில்லை. நண்பகல் வரை தேடிப்பார்த்து களைத்து ஒரு மரத்தடியில் படுத்து, தன் வாகனத்திடமிருந்து நம்பிக்கையிழந்து தூங்கி விடுகிறார். ஆனால் கண்விழித்ததும் அந்த ஒட்டகம் தன் முன்னால் தானாகவே வந்து நிற்பதைக் கண்டால் அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும்? தன் அடியார் (பாவங்களை விட்டு விட்டு தவ்பா செய்தவாறு) தன்னிடம் திரும்பி வரும்போது அல்லாஹ்வுக்கும் இவ்வாறே மகிழ்ச்சி ஏற்படும். (புகாரி)

இவ்விரண்டு உதாரணங்களிலும் வித்தியாசம் இருக்கிறது. இயேசு கிறிஸ்து இவ்வுலகில் தோன்றியபோது இஸ்ரவேலர்களைத் தவிர பெரும்பான்மையான சமுதாயங் –களிடம் திறமை, இறையச்சம், நன்மை, மார்க்கப்பற்று ஆகியவை காணப்பட்டன. மேலும் ஆன்மிகத் தண்ணீர் அவர்களுக்கு நீர்ப்பாய்ச்சி வந்தது. இயேசு கிறிஸ்துவின் உதாரணத்திலிருந்து சான்று கிடைப்பதைப் போன்று தகப்பனாரின் பிள்ளைகள் தகுதியடைந்தவர்களாகவும், நல்லவர்களாகவும், கட்டுப்பட்டு நடப்பவர்களாகவும் இருந்தனர். ஒரே ஒரு மகன்தான் வழிதவறியிருந்தார். வழிதவறிய அந்த மகனைப் பற்றி ஹஸ்ரத் ஈஸா (அலை) குறிப்பிட்டு அந்த தகுதியில்லாத மகனைப் போன்ற நிலைதான் இஸ்ரவேல்களின் நிலைமையும் எனவும், தாம்

அத்தகைய சமுதாயத்தை சீர்திருத்துவதற்காக அனுப்பப்-பட்டுள்ளேன் எனவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதற்கு மாற்றமாக, நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில் முழு உலகிலும் வழிகேடும், அறிவீனமும் பரவியிருந்தது. சமுதாய அளவிலும் நாடளவிலும் வழிகேடு மற்றும் பாவத்தின் படு குழியில் விழாத எந்த நாடும் எந்த சமுதாயமும் எஞ்சியிருக்கவில்லை. அந்தக் காலத்தில் உலக மக்களிடத்தில் ஆன்மிக நீர்ப்பாய்ச்சி வளரும் எந்த சமுதாயமும் இருக்கவில்லை. மக்களில் எந்தவொரு கூட்டத்தாரும் இறைவன் பக்கம் கவனம் செலுத்தவில்லை. ஆக, எல்லா மக்களும் இறைவனுடைய பாதையை விட்டு விலகி காணாமற்போய் விட்டார்கள். அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். மேலும் காணாமற்போன இறையடியார்களை மீண்டும் இறைவன் பக்கம் கொண்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களோ தமது தப்லீக் எல்லையைச் சுட்டிக் காட்டுவதற்காக பெரும்பான்மையான சந்ததிகள் நல்லவர்களாகவும் ஒரே ஒரு மகன் மோசமானவ-ராகவும் உள்ள ஒருவரின் உதாரணத்தைக் குறிப்பிட்டிருக்-கிறார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் தமது தப்லீக் எல்லையைச் சுட்டிக் காட்டுவதற்காக தன்னிடமுள்ள எல்லாவற்றையும் இழந்த ஒருவருடைய உதாரணத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் இந்த இரண்டு உதாரணங்களும் இந்த இரு நபிமார்களின் தகுதிகளைச் சுட்டிக் காட்டுகின்றன.

எனவே உண்மையான மகிழ்ச்சியை விரும்புகிறீர்கள் என்றால் வீணாகிவிட்ட பொருள்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பெற முயலுங்கள் என்பதன் பக்கம் பெருநாள் தம் கவனத்தைத் திருப்புகிறது.

முஸ்லிம்களுக்கு பெருநாள் என்பது ஒரு படிப்பினைக்குரிய இடமாகும். எவரை இழிவும் இழுக்கும் சூழ்ந்துள்ளதோ, எவர் கஷ்டங்களிலும் துன்பங்களிலும் சிக்கித் தவிக்கின்றாரோ, எவர் தம் தாய் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டாரோ, எவர் கஷ்டங்களின் காரணமாக தனது தாய், தந்தை, சகோதரிகளை விட்டுப் பிரிந்து கொண்டிருக்கிறரோ, எவர் நண்பர்களுக்குப் பகரமாக பகைவர்களின் கூட்டத்தில் சுற்றி வளைக்கப்-பட்டிருக்கிறாரோ, பேறிழந்த நிலையின் காரணமாக எவருடைய வீட்டில் எப்பொழுதும் சண்டை சச்சரவுகள் இருக்கின்றதோ மேலும் ஏழ்மையும் வறுமையும் அவரை தலைதூக்க விடாமல் இருக்கிறதோ, எவர்களுடைய உள் நிலைமைகள் இப்படி இருக்குமோ அவருடைய மகிழ்ச்சி அல்லது பெருநாள் வெளிப்படையான நல்ல ஆடைகளினால் முழுமை பெற முடியாது. அவர் சிரிப்பதும், மக்களுடன் அமர்ந்து மகிழ்ச்சி கொண்டாடுவதும் அவரது மனமகிழ்ச்சிக்கு சான்று பகர முடியாது. இன்னும் சொல்லப்போனால் இது உள்ளொன்றும் புறமொன்றும் வைத்திருக்கும் ஒரு நயவஞ்சகத்தனமான நிலையாகும். ஒரு வேதனையாகும். மனமோ உள்ளே துக்கத்தாலும் கவலைகளாலும் கொதித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர் அதனை வெளிப்படுத்தவும் முடியாது.



முஸ்லிம்கள் தற்போதைய பெருநாளினால் பெருநாளைக்கு முன்னர் தாம் இழந்து விட்ட கவுரவம், செல்வாக்கு, செல்வம், கண்ணியம், தக்வா, தூய்மை, நன்மை, இறைவணக்கம், மதிப்பு ஆகியவற்றைப் பெறுவதற்கு முழு மூச்சாக முயன்று அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டால்தான் உண்மையான பெருநாளையும், உண்மையான மகிழ்ச்சியையும் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு காலத்தில் இஸ்லாம் மட்டுமே இருந்ததைப் போன்று இப்போதும் இஸ்லாம் ஆன்மிக அளவில் உலகை வெற்றி கொள்ள வேண்டும். மேலும் இஸ்லாத்தின் சான்றுகளுக்கு முன் எவருடைய தலையும் தூக்க முடியாது என்பதையும், அதனை எதிர்த்துப் போட்டி போட முடியாது என்பதையும் எப்போது முஸ்லிம்கள் தம் அறிவாலும் செயலாலும் நிரூபித்துக் காட்டுவார்களோ, அப்போதுதான் முஸ்லிம்கள் உண்மையான மகிழ்ச்சியையும் பெருநாளையும் கொண்டாட முடியும். மேலும் அதுவே உண்மையான பெருநாளும் உண்மையான மகிழ்ச்சிக்குரிய நாளுமாகும்.

இதனால் நான் என் ஜமாஅத்திற்கு குறிப்பாக வலியுறுத்திக் கூறுவதென்னவென்றால், உங்களிடத்தில் பல பெரும் பெருநாள்கள் மறைந்து கிடக்கின்றன. உலகத்தில் உள்ள அனைத்து மக்களும் உங்கள் மூலமாக உண்மையிலும் நேர்வழியிலும் வர வேண்டும். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இவ்வுலகத்தைக் காப்பதற்காக இறைவன் இறக்கிய உண்மையான ஒளியை எல்லா மார்க்கங்களும் பெறும். மேலும் இதிலிருந்து முழு உலகமும் வயிறு நிரம்ப தண்ணீர்

குடிக்கும். மேலும் அந்த உண்மையான ஒளியை வெளிப்படுத்துவதற்காகத்தான் அல்லாஹ் இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைத் தோற்றுவித்துள்ளான்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறிய உதாரணத்தைப் போன்று இங்கு ஒரு மகன் மட்டும் காணாமல் போகவில்லை. மாறாக ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான அன்பிற்குரியவர்கள் காணாமற் போயிருக்கிறார்கள். அவர்களைத் தேடுவதும், அவர்களுக்கு நேர்வழியை சொல்லிக் கொடுப்பதும் உங்கள் பொறுப்பாகும். ஆகவே எப்போது நீங்கள் இந்த குறிக்கோளில் வெற்றி அடைவீர்களோ அப்போதுதான் உண்மையான பெருநாளும் உண்மையான மகிழ்ச்சியும் ஏற்படும். எனவே எவர் சிரிக்கிறாரோ அவர் அறிவிலி ஆவார். எவர் தம் கடமையையும், குறிக்கோளையும் உணராமல் மகிழ்ச்சியடைகிறாரோ அவர் முட்டாள் ஆவார். தன் தந்தையின் மரணத்தை உணராமல் ஒரு குழந்தை ஓடி ஆடித் திரிகிறதென்றால் அது அதன் அறிவீனமாகும். மரணித்து விட்ட தம் தந்தையை மக்கள் நீராட்டுவதைப் பார்க்கும் குழந்தை, என் தந்தையை மக்கள் ஒன்றுசேர்ந்து நீராட்டுகிறார்களே என நினைத்து மகிழ்ந்தால் அது அக்குழந்தையின் அறியாத்தனமாகும். தந்தைக்கு கஃபன் துணி கட்டும்போது என் தந்தைக்கு புத்தாடை அணிவிக்கிறார்களே எனக்கருதி குழந்தை மகிழ்கிறது என்றால் அது அதன் அறியாமையாகும். ஏனெனில் அது உண்மையிலேயே துக்கத்தின் வாசலாகும். அவருக்காக அழுது புலம்பக் கூடிய நேரமாகும். அந்த நேரம் உண்மையில் அக்குழந்தை அனாதையாகி அதற்குப் பல துன்பங்களும், கஷ்டங்களும் வரக்கூடிய காலமாகும். ஆனால் அது தன் குறைமதியால், அறியாமையால் மகிழ்ச்சி கொண்டாடுகிறது என்றால் அந்த மகிழ்ச்சி உண்மையான மகிழ்ச்சியாக இருக்குமா? ஆகவே எந்த மகிழ்ச்சியால் மனிதன் கவனக் குறைவாகி விடுவானோ, மேலும் தனது உண்மையான கடமையையும், நோக்கங்களையும் மறந்து விடுவானோ அது மகிழ்ச்சி அல்ல; மாறாக, துக்கம் அனுசரித்தல் ஆகும். மேலும் மனிதன் தனது நோக்கங்களையும், குறிக்கோள்களையும் பெறுவதற்கான ஒரு வழிமுறையாக பெருநாளைக் கருதுவானாயின், அது பெருநாளாகவும் இருக்க முடியாது; மகிழ்ச்சியாகவும் இருக்க முடியாது.

ஆகவே, இந்தப் பெருநாள் உண்மையில், உண்மையான பெருநாளையும், உண்மையான மகிழ்ச்சியையும் பெறுவதற்கான வாய்ப்பைக் கொடுக்கின்றது. இந்தப் பெருநாளை அசல் நோக்கத்தைப் பெறுவதற்கான வழிமுறையாகவும், தூண்டுகோலாகவும் நீங்கள் கருதி அவற்றைப் பெறுவதற்கு முயற்சிகள் செய்யத் துவங்கி விட்டால், அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூலமாக உங்களுக்கு வழங்கிய எல்லா விதமான ஆதாரங்களைக் கொண்டும் சான்றுகளைக் கொண்டும் வானத்தின் அடையாளங்களைக் கொண்டும் உலகின் வாயை அடைத்து விடலாம்.

மனிதன் வெற்றி பெறுவதற்கு இரண்டு சாமான்கள் தான் தேவை. ஒன்று ஆயுதம்; இன்னொன்று வல்லமை. ஆயுதத்தைப் பொருத்தவரை அல்லாஹ் அதனை உங்களுக்குக் கொடுத்து விட்டான். ஆதாரங்கள் என்ற இந்த ஆயுதங்கள் மிகக் கூர்மையானவை. இவற்றிற்கு நிகரானவை வேறு எந்த மார்க்கத்திலும் இல்லை. இப்போது நீங்கள் உள்ளத்தை உறுதிப்படுத்தியவாறு வல்லமையுடன் செயல்படுங்கள். உலகில் வெறும் ஆயுதத்தால் மட்டும் ஒருவர் வேலை செய்யவும் முடியாது. ஆயுதம் இல்லாமல் வெறும் வல்லமை மட்டும் வெற்றியினை ஈட்டித் தரவும் முடியாது. இரண்டும் இணைந்துதான் வெற்றியினைத் தேடித் தருகிறது. முஸ்லிம்களின் கவனக்குறைவினாலும், சோம்பேறித்தனத்தினாலும் உலகத்திலிருந்து ஒன்று இல்லாமல் மறைந்து போயிற்று. அதனையும் அல்லாஹ் உங்களுக்குத் திருப்பித் தந்துள்ளான். அதுதான் ஆதாரங்கள், சான்றுகள் என்ற கூரிய வாளும் அழிக்கவல்ல பீரங்கியுமாகும். இப்போது இவற்றை உபயோகிப்பது உங்களின் பொறுப்பாகும்.

பாருங்கள்! இந்த வேலையை வானவர்கள்தான் செய்ய வேண்டும் என்றிருந்தால், மனிதனுடைய உழைப்பும்,

முஸ்லிம்கள் தற்போதைய பெருநாளினால் பெருநாளைக்கு முன்னர் தாம் இழந்து விட்ட கவுரவம், செல்வாக்கு, செல்வம், கண்ணியம், தக்வா, தூய்மை, நன்மை, இறைவணக்கம், மதிப்பு ஆகியவற்றைப் பெறுவதற்கு முழு மூச்சாக முயன்று அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டால்தான் உண்மையான பெருநாளையும், உண்மையான மகிழ்ச்சியையும் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு காலத்தில் இஸ்லாம் மட்டுமே இருந்ததைப் போன்று இப்போதும் இஸ்லாம் ஆன்மிக அளவில் உலகை வெற்றி கொள்ள வேண்டும். மேலும் இஸ்லாத்தின் ஆதாரங்களுக்கு முன் எவருடைய தலையும் தூக்க முடியாது என்பதையும், அதனை எதிர்த்துப் போட்டி போட முடியாது என்பதையும் எப்போது முஸ்லிம்கள் தம் அறிவாலும் செயலாலும் நிரூபித்துக் காட்டுவார்களோ அப்போதுதான் முஸ்லிம்கள் உண்மையான மகிழ்ச்சியையும் பெருநாளையும் கொண்டாட முடியும். மேலும் அதுவே உண்மையான பெருநாளும் உண்மையான மகிழ்ச்சிக்குரிய நாளுமாகும்.

தப்லீக் செய்வதும், முயற்சி செய்வதும் தேவையே இல்லை என்றிருந்தால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் கண்டிப்பாக வானவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளை வீழ்த்தி இருப்பார்கள். நபித்தோழர்களுக்கும் உழைக்க வேண்டிய தேவை இருந்திருக்காது. அவர்கள் தம் நாட்டை விட்டு விட வேண்டிய தேவையும் வந்திருக்காது. மேலும் கஷ்டங்களையும், துன்பங்களையும் சகித்துக் கொண்டு உயிர்களை விடக் கூடிய நிலை வரை ஏற்பட்டிருக்காது. எல்லா வேலைகளும் வானவர்கள் மூலமாக நடைபெற்றிருக்கும். ஆனால் அப்படி நடைபெறவில்லை. இதற்கு நேர் மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இரவு பகலாக உயிரை மாய்க்கும் அளவிலான உழைப்பை மேற்கொள்ள வேண்டியதிருந்தது. மக்களிடமிருந்து துக்கங்களைப் பெற வேண்டிய நிலை உருவானது. நபித்தோழர்களின் உயிர்களையும் இந்த வழியில் கொடுக்க வேண்டியது ஏற்பட்டது. பிறகுதான் இந்த வேலை முழுமையடைந்தது.

ஆகவே, இப்பொழுதும் இவ்வாறே நடைபெறும். ஒவ்வோர் அஹ்மதியும் மார்க்கத்திற்காக தனது உயிர், பொருள், கவுரவத்தை தியாகம் செய்வதற்குத் தயங்காமல், அதற்காகத் தயாராகாதவரை இந்த வேலை முடிவினை எய்த முடியாது. ஒவ்வோர் அஹ்மதியும் தமது இந்தக் கடமையைப் புரிய வேண்டும். மேலும் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் அதனை பிரச்சாரம் செய்வதற்காகவும் எல்லா விதமான தியாகங்களும் செய்ய ஒவ்வோர் அஹ்மதியும் தயாராக வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட இந்த வேலை கண்டிப்பாக நடந்தே தீரும். ஆனால் எவர் சேவையிலிருந்து விலகியிருக்கிறாரோ, எவருடைய உயிரும் உடைமையும் இந்த வேலையில் பங்கு பெறவில்லையோ அவர் மீது பரிதாபம்!

இஸ்லாம் கண்டிப்பாக வெற்றி அடையும்; வெற்றி அடைந்தே தீரும். இது நிர்ணயிக்கப்பட்டு விட்டது. ஆனால் வாளினால் அல்ல. ஏனெனில் இந்தக் காலம் வாளின் காலமல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் உலகம் வாளினால் எதிர்த்துப் போரிட்டது. எனவே அந்தக் காலத்தில் வாளினாலேயே திரும்ப எதிர்த்துப் போரிடப்பட்டது. எதிரிகள் எதில் கர்வம் கொண்டிருந்தார்களோ எந்த வல்லமையில் அவர்களுக்கு ஆணவம் இருந்ததோ அது வெற்றி கொள்ளப்பட்டு காட்டப்பட்டது.

ஆனால் இன்று எதிரிகள் வாளெடுக்கவில்லை. மாறாக, இஸ்லாம் பலவந்தத்தினால் எங்களது உயிரையும், உடலையும்தான் வெற்றி கொண்டதே தவிர எங்கள் உள்ளங்களை வெற்றி கொள்ளவில்லை என இஸ்லாத்தின் மீது குற்றம் சாட்டி, எள்ளிநகையாடுகிறார்கள். இஸ்லாம் எங்களின் சான்றுகளை முறியடிக்க முடியாது என்றும், எங்கள் அறிவியலுக்கு முன்னால் நிலைநிற்க முடியாது என்றும் அவர்கள் இஸ்லாத்தின் மீது குற்றம் சாட்டுகிறார்கள். அவர்கள் புரிவதில்லை. பிடிவாதம் மற்றும் காழ்ப்புணர்ச்சியின் கட்டை தம் கண்களில் கட்டிக் கொண்டு திரிகிறார்கள். அவர்கள் பொய்யான அன்பில், உண்மையை மறைக்கும் அளவிற்கு குருடராயிருக்கிறார்கள். இஸ்லாம் தற்காப்பிற்காகத்தான் வாளெடுத்தது என்பதும் அவர்களுக்குத் தெரியாதா? நிராகரிப்பவர்களின் அநியாயத்திற்கு எல்லையே இல்லாமல் இருந்தது. ஆனால் அல்லாஹ் எதிரிகளுக்கு இந்த அம்சத்தையும் காட்டி விட்டான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவும் இஸ்லாத்தின் எதிரிகள் ஆதாரங்கள், சான்றுகளால் வெற்றி கொள்ளப்பட்டார்கள். அந்த எதிரிகள் இந்த களத்திலும் இஸ்லாத்திற்கு எதிராக நிற்க முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் கொள்கை அளவில் இஸ்லாத்தின் எதிரிகள் வெற்றி கொள்ளப்பட்டாலும், இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழங்கிய (சான்றுகள் என்ற) இந்த ஆயுதங்களின் மூலமாக முழு உலகிலும் இஸ்லாத்தைப் பரப்புவது நம் ஜமாஅத்தின் பணியாகும். எவர்களுடைய முயற்சியின் மூலமாக இந்தப் பணி நிறைவேறுமோ அவர்கள் பாக்கியம் பெற்றவர்கள். இஸ்லாம் வெற்றி பெறுமா? இல்லையா? என்ற கவலை நீங்கி விட்டது. இஸ்லாம் வெற்றி பெறும். கண்டிப்பாக வெற்றி பெறும். ஆனால் யார் மூலமாக வெற்றி பெறும் என்பதே கேள்வி. நம் மூலமாகவே வெற்றி பெறும் என தற்போயை நிலைமைகள் எடுத்துக் கூறுகின்றன. ஏனெனில் அல்லாஹ் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை நமக்குத் தந்துள்ளான். ஆனால் நம்முடைய நிலைமைகளும் இதனை உண்மைப்படுத்துகின்றனவா? நம் கைகளால் இந்த வேலை நிறைவேறும் விதத்தில் நமது முயற்சிகள் நம்மை இதற்கு உரிமை பெற்றவர்களாக ஆக்குகின்றனவா?

ஒவ்வொருவரும் தம் நிலைமைகளை சிந்தித்து தம் மூலமாக இஸ்லாத்திற்கு மற்ற மார்க்கங்களின் மீது மேலோங்குதல் வழங்கப்படும் அளவுக்கு இஸ்லாமிய சேவைக்காக தம் மார்க்க தியாகம் இருக்கிறதா? எனப் பார்க்க வேண்டும். ஆனால் பெரும்பாலானவர்களைக் குறித்து அவ்வாறு நாம் கூற முடியவில்லை.

ஒருவருக்கொருவர் சண்டை, பொறாமை, பகைமை, சின்னச் சின்ன விஷயங்களுக்காக முகந்திருப்பிக் கொள்ளுதல் போன்றவற்றை நான் பார்க்கிறேன். ஆனால்

இதுவோ, ஒற்றுமைக்காக தமது சொந்த நோக்கங்களை விட்டு விட வேண்டிய நேரமாகும். ஒற்றுமைக்காக தமது சொந்த ஆசைகளை தியாகம் செய்யாமல், சின்னச் சின்ன விஷயங்களிலெல்லாம் சண்டையிட்டால் கூட்டமைப்பு என்பது இல்லாமற் போய்விடும்........

உண்மையான அபாய வேளையில் மனிதன் தன் அந்தஸ்து, கவுரவத்தை மறந்து வேலை செய்கிறான் என்பது மனித இயல்பாகும். உதாரணமாக, ஒருவருடைய வீட்டில் தீப்பற்றி எரியும்போது, மக்கள் பலர் அந்தத் தீயை அணைப்பதில் ஈடுபட்டிருக்கும்போது ஒரு கிழவர் வீட்டு எஜமானரைப் பார்த்து அந்தத் தீயை அணைப்பது பற்றி கட்டளையிட்டால் அதனை ஏற்றுக் கொள்வதில் அவர் எந்த சாக்கும் சொல்லமாட்டார். அந்த சூழ்நிலையில் மேலதிகாரி, பணியாள் என்பதை யாரும் பார்ப்பதில்லை.

இப்போது இஸ்லாத்திற்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தை மக்கள் தமது அபாயமாகக் கருதுகிறார்கள் என்றால், இஸ்லாத்தின் வெற்றிக்காக அவர்கள் தமது எல்லா உணர்ச்சிகளையும் தியாகம் செய்வதற்கு ஏன் ஆயத்தமாக இல்லை? மவுனமாகவும், கவனமற்றவர்களாக –வும் ஏன் இருக்கிறார்கள்? இரண்டு விஷயங்களில் ஒன்று நிச்சயம் இருந்தாக வேண்டும். ஒன்று, இஸ்லாத்திற்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தை மக்கள் தம் அறிவீனத்தால் தமது அபாயமாகக் கருதுவதில்லை. அல்லது இஸ்லாத்தை அவர்கள் உண்மையானது என நம்பவில்லை – நவூதுபில்லாஹ் (அல்லாஹ் காப்பானாக).

மற்றபடி, முஸ்லிம்கள் இஸ்லாத்திலிருந்து விலகி விடவில்லை. இஸ்லாம் முன்னேற்றம் அடையாவிட்டால் முஸ்லிம்கள் அதிகமாக இழிவுக்காளாவார்கள். எனவே, இஸ்லாத்தின் கவுரவம் உண்மையில் முஸ்லிம்களின் கவுரவமாகும். மேலும் இஸ்லாத்தின் முன்னேற்றம் உண்மையில் முஸ்லிம்களின் முன்னேற்றமாகும்.

முஸ்லிம்கள் இஸ்லாத்திற்கு நேரும் அபாயத்தை தமது அபாயமாகவும், இஸ்லாத்திற்கு ஏற்படும் அவலநிலையை தமது அவலநிலையாகவும் கருதுவதில்லை எனத் தெரிகிறது. அவ்வாறில்லையென்றால் அவர்களின் நிலை, தன் கைகளாலேயே தன் பாதங்களை வெட்டுபவனின் நிலையாகும். இஸ்லாம் முன்னேறவில்லையென்றால், முஸ்லிம்கள் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடியும்? எவ்வாறு முன்னேற முடியும்?

முஸ்லிம்கள் இஸ்லாத்தை விட்டு விலக முடியாது. ஆயினும் இஸ்லாம் முஸ்லிம்களை விட்டு விலகி விடலாம். முஸ்லிம்கள் தம் கடமைகளைப் புரியாவிட்டால், சோம்பேறியாக உட்கார்ந்திருந்தால் இறைவன் வேறொரு சமுதாயத்தைக் கொண்டு வருவான். அது இஸ்லாத்திற்கு தொண்டு செய்யக் கூடியதாக இருக்கும். (47:39) ஆனால் அந்த நாள் அழுது புலம்புவதற்கான நாளாக இருக்குமே தவிர மகிழ்ச்சிக்குரிய நாளாக இருக்காது.

எனவே, உண்மையான பெருநாளைக் காண விரும்பு –கின்றீர்கள் என்றால் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக முழு முயற்சியை மேற்கொள்ளுங்கள். முஸ்லிம்களின் ஒன்றுமையிலும் அவர்கள் ஒன்றுபடுவதிலும்தான் இஸ்லாத்தின் முன்னேற்றம் இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருளையும் இஸ்லாத்தின் வழியில் உண்மையான உள்ளத்துடன் தியாகம் செய்வதற்கு ஆயத்தமாகாத வரை இந்த ஒற்றுமை உருவாக முடியாது.

உண்மையான அந்தப் பெருநாளை அருகில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யாதவரை இந்தப் பெருநாள் எல்லாம் ஒரு விளையாட்டுப் பொருள் மாதிரிதான்; உண்மையான பெருநாள் அல்ல. உள்ளங்களில் உண்மையான மகிழ்ச்சி உருவாகாதவரை பெருமைக்குரிய ஆடைகளை அணிவதும், நறுமணம் பூசிக் கொண்டு மகிழ்வதும் எந்த வேலைக்கும் ஆகாது. மேலும் இஸ்லாத்திற்குத் தொண்டு செய்யாதவரை, இஸ்லாத் –திற்காக உண்மையான தியாகங்களைச் செய்யாதவரை உண்மையான மகிழ்ச்சி உருவாகவும் முடியாது...........

அல்லாஹ் நம் ஜமாஅத்திற்குத் தியாகம் செய்யும் நல்வாய்ப்பை வழங்குவானாக. அப்போதுதான் பெருநாள் அவர்களுக்கு உண்மையான மகிழ்ச்சியாகவும், உண்மையான பெருநாளாகவும் இருக்கும்.

ஒவ்வோர் அஹ்மதியும் மார்க்கத்திற்காக தமது உயிர், பொருள், கவுரவத்தை தியாகம் செய்வதற்குத் தயங்காமல், அதற்காகத் தயாராகாத வரை இந்த வேலை முடிவினை எய்த முடியாது. ஒவ்வோர் அஹ்மதியும் தமது இந்தக் கடமையைப் புரிய வேண்டும். மேலும் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் அதனை பிரச்சாரம் செய்வதற்காகவும் எல்லா விதமான தியாகங்களும் செய்ய ஒவ்வோர் அஹ்மதியும் தயாராக வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட இந்த வேலை கண்டிப்பாக நடந்தே தீரும். ஆனால் எவர் சேவையிலிருந்து விலகியிருக்கிறாரோ, எவருடைய உயிரும் உடைமையும் இந்த வேலையில் பங்கு பெறவில்லையோ அவர் மீது பரிதாபம்!

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவுசார் அற்புதங்கள்

**ஜனாப் அதாவுல் முஜீப் ராஷித் ஸாஹிப்** (Naib Ameer & Imam of the London Mosque)

தமிழாக்கம்: இப்னு வஸீம்

எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த இறுதிக் காலத்தில் இஸ்லாத்தை உயிர்ப்பிப்பதற்காவும் இஸ்லாத்தின் வெற்றிக்காகவும், ஏற்றுக் கொள்ளப்பட்ட தூதர் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை அனுப்பினான். அன்னாரின் தூய வாழ்வின் ஒவ்வொரு நொடிப் பொழுதும் அல்லாஹ்வின் உதவி, ஆதரவு எனும் நிழலின்கீழ் கழிந்து வந்தது. எல்லாம் வல்ல இறைவன் ஒவ்வோர் அடியிலும் அன்னாருக்கு உதவியாளனாகவும், ஆதரவாளனாகவும், வழிகாட்டியாகவும் இருந்து வந்தான். அவன் அன்னாருக்குத் தன்னிடமிருந்து எத்தகைய இறைஞானம் மிக்க அறிவையும் ஞானத்தையும் வழங்கினான் எனில், அது பொய்யான கொள்கைகளைக் கிழித்தெறிந்து விட்டது. அன்னார் பொய்யைத் தகர்க்கும் தம்முடைய அறிவுப்பூர்வமான கூற்றுகளால் இஸ்லாத்திற்கு ஒரு புதிய வாழ்வளித்தது மட்டுமின்றி, அதையும் தாண்டி (இஸ்லாத்தைப்) பொய்யான மார்க்கங்கள் மீது வெற்றி பெறவும், மேலோங்கவும் செய்தார்கள்.

பிரபஞ்சத்தைப் படைத்தவன் அன்னாருடைய நாவுக்கும், எழுதுகோலுக்கும் எத்தகைய அற்புதமான மகத்துவத்தை வழங்கினான் என்றால், எத்தகைய கம்பீரமிக்க வெளிப்பாடுகளை அருளினான் என்றால், அவற்றிற்கு முன்னால் அனைத்து எதிரிகளும் திகைத்துப் போனார்கள். அன்னாருடைய தாக்கம் நிறைந்த எழுத்துகளின் எல்லையற்ற கடல் ரூஹானி கஸாயின் வடிவில் வெளிப்பட்டது. அன்னாருடைய ஆற்றல் மிகுந்த, அற்புதமான அறிவுக் கூற்றுகளின் சிறப்பை அந்நியர்களும் ஒப்புக் கொண்டனர். மேலும், அன்னாரை இஸ்லாத்தின் வெற்றி பெற்ற தளபதி என்று அழைத்தார்கள். ஒவ்வோர் அடியிலும் மாபெரும் அறிவுசார் அற்புதங்களும் அடையாளங்களும் அன்னாருடைய மகத்துவம் மற்றும் உண்மைத்துவத்திற்கு அடையாளம் ஆகி தொடர்ச்சியாக வெளிப்பட்டு வந்தன. அன்னார் என்னே அருமையாக கூறியுள்ளார்கள்!

صفِ دشمن کو کیا ہم نے بحُجّت پامال     سیف کا کام قلم سے ہی دکھایا ہم نے

எதிரிகளின் வரிசையை சான்றைக் கொண்டே
நாம் அழித்து விட்டோம்.

வாளின் பணியை எழுதுகோலைக் கொண்டே
நாம் செய்து காட்டினோம்.

## அற்புதம் என்றால் என்ன?

அகராதிகளின் அடிப்படையில், இயல்புக்கு அப்பாற்பட்ட மேன்மையையும், மகத்துவத்தையும் வெளிப்படுத்தும் செயல் அருஞ்செயல் எனப்படுகிறது. அதையும் விட மிகவும் மேலோங்கிய இடத்தை அற்புதம் வகிக்கிறது. ஒரு செயல் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. இயல்புக்கு அப்பாற்பட்ட இறை உதவியால், ஆதரவால் வெளிப்படுகிறது. உலக மக்கள் அத்துடன் போட்டியிட முடியாமல், அதற்கு நிகரான ஒன்றைக் கொண்டுவர முடியாமல் இயலாதவர்களாக, தாழ்ந்தவர்களாக ஆகி விடுகிறார்கள் எனும் பொழுதுதான் (அதற்குத்தான் அற்புதம் எனும்) இந்த சொல் சொல்லப்படுகிறது.

இதுபோன்ற அரிய அற்புதங்கள் அத்தகைய நபரின் உண்மைக்கும், அவர் இறைவன் புறமிருந்து வந்திருப்பதற்கும் தகர்க்க முடியாத சான்றுகளாக இருக்கின்றன. வானம் ஒளிமிகு விண்மீன்களால் நிறைந்திருப்பது போன்று, ஹஸ்ரத் தூய மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை இதுபோன்ற, ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய அரிய அற்புதங்களால் நிறைந்துள்ளது. அன்னார் மூலம் வெளிப்பட்ட ஒவ்வோர் அற்புதமும் எப்படிப்பட்டது என்றால், அது உண்மையைத் தேடுபவர்களுக்கு வழிகாட்டுவதற்கு மிகவும் போதுமான -தாகும். இன்றைய உரையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவுசார் அற்புதங்களைப் பற்றி எடுத்துக் கூறப்படும்.

## திருக்குர்ஆனின் உண்மைகள் மற்றும் இறைஞானங்களை எடுத்துரைக்கும் அற்புதம்

திருக்குர்ஆன் அறிவு மற்றும் நுட்ப ஞானத்தால் நிறைந்த ஓரிறைவனின் கூற்றாகும். நுட்ப ஞானம் மற்றும் அறிவுக் கூர்மையான ஒவ்வொரு விஷயம் மற்றும் நன்மையின் ஒவ்வொரு வழி பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளது. ஆனால், பல விஷயங்கள் உலகிற்கு புதிர்களாக ஆகியிருந்தன. இஸ்லாமிய மற்றும் மாற்றுமத அறிஞர்களும் இவற்றின் அசலான உண்மைத்துவத்தைப் புரிய முடியாதவர்களாக இருந்தார்கள். நன்கு அறிந்தவனும் எல்லாம் உணர்ந்தவனுமான இறைவன் இந்த சிரமமான விஷயங்களின் உண்மைத்துவத்தைத் தெள்ளத்தெளிவாகத் திருக்குர்ஆனில் எடுத்துக் கூறியுள்ளான்.

ஹஸ்ரத் தூய மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

1. நான் திருக்குர்ஆனின் அற்புதங்களின் நிழலில் அரபியின் சொற்செறிவு மற்றும் சொல்லாட்சியின் அடையாளம் வழங்கப் பெற்றுள்ளேன். எவராலும் இதில் எதிர்த்துப் போட்டியிட முடியாது.

2. நான் திருக்குர்ஆனின் உண்மைகள் மற்றும் இறைஞானங்களை எடுத்துரைக்கும் அடையாளம் வழங்கப் பெற்றுள்ளேன். எவராலும் இதில் எதிர்த்துப் போட்டியிட முடியாது.

இதற்கேற்ப அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று இந்தக் காலத்தில் எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மார்க்க விவகாரங்கள் அனைத்தின் உண்மைத்துவத்தையும் தம்முடைய நூல்களில் எடுத்துரைத்தார்களோ, அது ஒரு மகத்துவமிக்க அறிவுசார் அற்புதத்தைக் காட்டிலும் குறைந்ததல்ல. எடுத்துக்காட்டாக, நான் (சிலவற்றை) முன் வைக்கிறேன்:

ஹஸ்ரத் ஆதம் (அலை)அவர்களின் படைப்பு, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தந்தையின்றி பிறந்தது, சிலுவை மரணத்திலிருந்து தப்பித்தது, இயல்பாக மரணித்தது, நபிமார்களின் கண்ணியம், மரணத்திற்குப் பிறகு எழுப்பப்படுதல், வானவர்களின் இயல்பு, வஹீ மற்றும் இல்ஹாமின் உண்மைத்துவம், நூஹின் காலத்து சூறாவளி, ஃபிர்அவ்ன் கடலில் மூழ்கியது, சந்திரன் பிளந்த அடையாளம், சொர்க்கம் மற்றும் நரகம் பற்றிய சிந்தனை, மிஃராஜ் மற்றும் இஸ்ரா நிகழ்வுகள், மனித ஆன்மா, குரு பாபா நானக் அவர்கள் முஸ்லிமாக இருந்தது, துஆவின் உண்மைத்துவம், அரபு மொழி மொழிகளின் தாயாக இருப்பது மற்றும் இந்த வகையிலான எண்ணற்ற மார்க்க விவகாரங்கள் உள்ளன. அவற்றின் உண்மைத்துவத்தைப் பற்றிய அறிவை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கினான். அன்னார் திருக்குர்ஆனின் சான்றுகளால் இந்த அனைத்து விவகாரங்களையும் எவ்வாறு தெள்ளத்தெளிவாகக் கூறியிருக்கிறார்கள் என்றால், நிச்சயமாக அது நிகரற்ற ஓர் அற்புதமாகும். இந்த மகத்துவமிக்க அறிவுசார் அற்புதங்களைத்தான் நன்கு அறிந்தவனும், எல்லாம் உணர்ந்தவனுமான இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கினான். அன்னார் என்ன அருமையாகக் கூறியுள்ளார்கள்:

وہ خزائن جو ہزاروں سال سے مدفون تھے
اب میں دیتاہوں اگر کوئی ملے امیدوار

ஆயிரம் ஆண்டுகளாக புதைந்து கிடந்த
அந்தக் கருவூலங்களை இப்பொழுது நான் தருகிறேன்.
அதைப் பெறுபவர் எவரும் உண்டா?

## படைப்புகள் எனும் அற்புதங்கள் ஒரு பார்வை

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாழ்நாள் முழுவதும் செய்த ஜிஹாத் முழுக்க முழுக்க, தன்னளவில் ஒரு மகத்துவமிக்க உலகளாவிய அறிவுசார் அற்புதமாகும். அன்னாருடைய முதல் நூல் பராஹீனே அஹ்மதிய்யா 1880-இல் பொதுப் பார்வைக்கு வந்தது. அது மார்க்க உலகில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. பிறகு, அன்னார் 1908-இல் தமது வஃபாத் வரை, எழுதிய விலைமதிப்பற்ற நூல்களின் எண்ணிக்கை 80-க்கு மேற்பட்டது. இந்த நூல்கள் உருது, அரபி மற்றும் பாரஸீக மொழிகளில் உள்ளன. மல்ஃபூஸாத் எனப்படும் அன்னாருடைய (பொன்மொழிகளின்) 10 தொகுதிகள் உள்ளன. அவை போக, மஜ்மூஆ இஷ்திஹாராத் எனப்படும் (பிரசுரங்களின் தொகுப்புகளின்) 3 தொகுதிகளும் மக்தூபாத்தே அஹ்மத் எனப்படும் (அஹ்மதின் கடிதங்களின்) 4 தொகுதிகளும் உள்ளன.




இரவு பகலான கடின உழைப்பு மற்றும் இறையுதவி -யாலும் ஆதரவாலும் உலகின் பார்வைக்கு வந்த இந்த அறிவுக் கருவூலங்கள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக ஏறத்தாழ இருபதாயிரம் (20,000) பக்கங்களை உள்ளடக்கிய -வையாகும். அது அறிவு மற்றும் இறைஞானத்தின் ஒரு மாபெரும் கடலாகும். இந்த அனைத்து நூல்களும் ரூஹானீ கஸாயின் - ஆன்மிகக் கருவூலங்கள் எனும் பெயரால் அறியப்படுகின்றன. வெறும் 28 ஆண்டு காலகட்டத்தில் இந்த அளவுக்கு எழுத்துப் பணிகளை நிறைவேற்றுவது, இறையுதவி மற்றும் ஆதரவின் மகத்துவமிக்க அற்புதம் ஆகும். ஐயமின்றி, இது அன்னாருடைய அறிவுசார் அற்புதங்களின் எப்படிப்பட்ட தலைசிறந்த படைப்பு என்றால், அது நிகரற்றதுமாகும். மேலும், மார்க்கத் தகவல்களின் என்றும் வசந்தமாக இருக்கும் மாபெரும் கருவூலமும் ஆகும். அதன் அருள் என்றென்றும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

## புதிய புரட்சியின் துவக்கம் (பராஹீனே அஹ்மதிய்யாவின் வெளியீடு)

19-ஆவது நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் ஆங்கிலேயே அரசாட்சியின் காலகட்டம் முழு உச்சத்தில் இருந்தது. கிறிஸ்தவ கொள்கைப் பரப்புனர்கள் முழு ஆற்றலுடன் கிறிஸ்தவத்தின் பிரச்சாரத்தில் இரவு பகலாக மூழ்கியிருந்தார்கள். கிருஸ்தவம் இந்தியாவில் வேரூன்றி விட்டிருந்தது. இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுநர் அவர்களுக்கு எதிரான நூல்களின் ஒரு மலை குவிக்கப் -பட்டிருந்தது. அப்பொழுது இந்தியாவில் கிறிஸ்தவர்களின்

எண்ணிக்கை நாளுக்கு நாள் வேகமாக அதிகரித்துக் கொண்டே இருந்தது. இஸ்லாத்தின் பலவீனத்தின் நிலை எப்படி இருந்தது என்றால், சில பள்ளிவாசல்களின் இமாம்களுமே கிறிஸ்தவத்தின் வலையில் வந்து விட்டிருந்தார்கள். கிறிஸ்தவர்கள் பகிரங்கமாக இவ்வாறு வாதம் செய்து கொண்டிருந்தார்கள்:

இந்தியாவை கிறிஸ்துவமாக ஆக்கிய பிறகு, கிறிஸ்தவம் ஹஜ்ஜாஸ் மண்ணிலும் பரவிவிடும். கிறிஸ்துவத்தின் கொடி இஸ்லாத்தின் தலைமையகமான கஅபா ஆலயத்திற்கு மேல் பறக்க விடப்படும் - நவூதுபில்லாஹ் (அவ்வாறு கூறுவதை விட்டும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்). இந்தக் காரிருளில், இஸ்லாம் எல்லாப் பக்கத்தில் இருந்தும் எதிரிகளின் நீர்ச்சுழலுக்குள் வந்து விட்டிருந்த போது, இறைவனின் கருணை பொங்கி எழுந்தது. காதியான் எனும் சிற்றூரிலிருந்து நேர்வழியின் ஒரு சந்திரன் உதித்தது.

அல்லாஹ்வின் கருணை ஆகரீன மின்ஹும் (இதுவரை அவர்களுடன் சேராத) எனும் தனது வாக்குறுதிக்கேற்ப ஏற்றுக் கொள்ளப்பட்ட தூதுர் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை மஹ்தி மஸீஹாக அனுப்பினான். அன்னார் அல்லாஹ்வின் உதவி, ஆதரவின் நிழலில் எந்தஅளவு கம்பீரத்துடனும் ஆற்றலுடனும் எல்லா மார்க்கத்திற்கு எதிராகவும் இஸ்லாத்தின் மேன்மையை நிரூபித்தார்கள் என்றால், இஸ்லாத்தின் வெற்றியின் எத்தகைய உறுதியான அடித்தளத்தை நிறுவினார்கள் என்றால், அது மார்க்க உலகின் வரைபடத்தை மாற்றி வைத்து விட்டது!




ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூலான, உலகின் மூலை முடுக்குகள் வரை புகழ்பெற்ற பராஹீனே அஹ்மதிய்யா மூலமாக இஸ்லாத்தைத் தற்காக்கும் இந்தப் புனிதப் போர் துவங்கியது. இந்த நூல் வெளியான உடனேயே முஸ்லிம்களின் துணிவு அதிகரித்து விட்டது. மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தது. இஸ்லாத்தைத் தற்காக்கும் போர் வீரர் போட்டிக் களத்திற்கு இறங்கி வந்துள்ளார் என்பதை முஸ்லிம்கள் பார்த்தார்கள்.

பிரசித்தி பெற்ற அஹ்லே ஹதீஸ் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இவ்வாறு எழுதினார்: "எமது கருத்துப்படி, இந்த நூல் இந்தக் காலத்தில் மற்றும் தற்போதைய நிலைகளை முன்னிறுத்தி எத்தகைய நூல் என்றால், அதற்கு நிகரானது இன்று வரை இஸ்லாத்தில் எழுதப்படவில்லை." (இஷாஅத்துஸ் ஸுன்னா இதழ், தொகுதி 7, எண் 6, பக்கம் 169)

## திருக்குர்ஆனுக்கு விளக்கவுரை எழுதுவதில் அற்புதத்தின் அடையாளம் (இ∴ஜாஸுல் மஸீஹ்)

இந்தப் போட்டி தொடர்பான நீண்ட விவரம் உள்ளது. சுருக்கமாக இவ்வாறாகும்: துவக்கமாக, ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தாம் வாதம் புரிந்த பிறகு, எல்லா அறிஞர்களைப் பொதுவாகவும் பீர் மெஹர் அலீ ஷாஹ் கோலட்வீ சாஹிபைக் குறிப்பாகவும் அரபு மொழியில் விளக்கவுரை எழுதும் போட்டிக்கு அழைத்தார்கள். ஆனால், கோலட்வீ சாஹிப் போட்டிக்கு ஆயத்தமாகவில்லை.

இதனால் ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சான்றைப் பூர்த்தி செய்யும் வகையில், சூரா ∴பாத்திஹாவின் விளக்கவுரையை 70 நாள்களில் எழுதி வெளியிடுவதற்கு அவரை அழைத்தார்கள். ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நோய் மற்றும் பலவீனமான உடல்நலம் இருந்தும் குறித்த நேரத்தில், அதாவது, 70 நாள்களுக்குள் சொற்செறிவும் சொல்லாட்சியும் மிக்க அரபு மொழியில் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு விளக்கவுரையைத் தம் சார்பாக வெளியிட்டு விட்டார்கள். பிறகு, அத்துடன் போட்டியிடுவதற்கு அவரை அழைத்தார்கள். மேலும், இவ்வாறு எழுதினார்கள்:

அவர் இந்த விளக்கவுரையை எழுதுவதற்காக உலகம் முழுவதிலும் உள்ள அறிஞர்களிடமிருந்து உதவி பெறலாம். அரேபியாவின் மொழிப் புலமை பெற்றவர்களையும் அழைத்துக் கொள்ளலாம். எனது விளக்கவுரைக்குப் போட்டியாகத் தமது விளக்கவுரையை வெளியிட வேண்டும். இந்த சவாலுக்கு 122 ஆண்டுகளின் நீண்ட காலகட்டம் கழிந்து விட்டது. ஆனால், இன்று வரை உலகின் எந்தவோர் அறிஞரும் தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டமாக இ∴ஜாஸுல் மஸீஹ் நூலுக்குப் போட்டியாக சூரா ∴பாத்திஹாவின் விளக்கவுரையை வெளியிட முடியவில்லை. வெளியிடவும் முடியாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த முன்னறிவிப்பு எந்த அளவு மேன்மையுடன் நிறைவேறியது:

فانه كتاب ليس له جواب அதாவது, (இ∴ஜாஸுல் மஸீஹ் எனும்) இந்த நூல் எத்தகையது என்றால், இதற்கு பதில் கொடுப்பது எவருக்கும் சாத்தியமில்லை! இந்த மகத்துவமிக்க அறிவுசார் அற்புதம் தொடர்பாக ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த சொற்கள் நினைவில் கொள்ளத்தக்கவை. அன்னார் கூறுகிறார்கள்: "நான் அல்லாஹ்வுக்கு முன் இவ்வாறு துஆ செய்தேன்: அல்லாஹ்வே! இந்த நூலை அறிஞர்களுக்கு அற்புதமாக ஆக்கி விடுவாயாக!..... மேலும், எனது துஆ அந்த இரவே அல்லாஹ்வின் அவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (இ∴ஜாஸுல் மஸீஹ் ரூஹானீ கஸாயின் தொகுதி 18, பக்கம் 66, அரபு வாக்கியத்தின் மொழியாக்கம்)

அன்னார் என்ன அருமையாகக் கூறியுள்ளார்கள்:

آزمائش کے لئے کوئی نہ آیا ہر چند
ہر مخالف کو مقابل پہ بلایا ہم نے

சோதித்துப் பார்ப்பதற்காக ஒருபோதும் எவரும் வரவில்லை. ஒவ்வோர் எதிரியையும் நாம் போட்டிக்கு அழைத்தோம்.

திருக்குர்ஆனின் இறைஞானத்தை எடுத்துரைப்பதில் அன்னாரின் இந்த அழைப்பு விடுத்தல், இறைவன் அன்னாருக்குத் திருக்குர்ஆனின் விளக்கவுரை எழுதுவதற்கான அற்புதமான அடையாளத்தை வழங்கியுள்ளான் என்பதற்குத் தெளிவான சான்றாகும். அதை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு உலகில் எவருக்குத் துணிச்சல் வரவில்லை. இன்று வரை எவராலும் இவ்வாறு செய்யவும் முடியவில்லை!

எகிப்தின் ஒரு பத்திரிகை 'அக்பாருல் மனார்' இல், இ.ஃஜாஸுல் மஸீஹ் நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ள சூரா ஃபாத்திஹா விளக்கவுரை பற்றி இந்தத் திறனாய்வு வெளியானது: ஐயமின்றி, இந்த நூலின் சொற்செறிவும் சொல்லாட்சியும் அற்புதத்தின் எல்லையை சென்றடைந்து விட்டன. ('அல் மனார்' பத்திரிகை தொகுதி 4, பக்கம் 545)

## குத்பா இல்ஹாமியா

ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அறிவுசார் அற்புதங்களில் ஒன்றும், ஈமானுக்கு வலுவூட்டும் ஓர் எல்லையற்ற எடுத்துக்காட்டும் குத்பா இல்ஹாமியா ஆகும். அன்னாரின் சொந்தச் சொற்களில் இதைப் பற்றி கூறுகிறேன். அன்னார் கூறுகிறார்கள்: 1900-ஆவது ஆண்டு ஏப்ரல் 11-ஆம் தேதி ஈதுல் அழ்ஹா அன்று காலை நேரத்தில் எனக்கு இவ்வாறு இறையறிவிப்பு வந்தது: இன்று நீர் அரபு மொழியில் உரை நிகழ்த்துவீராக! உமக்கு ஆற்றல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த இறையறிவிப்பும் வந்தது:

كَلَامٌ اُفْصِحَتْ مِنْ لَّدُنْ رَبٍّ كَرِيْمٍ அதாவது, இந்தக் கூற்றில் இறைவன் புறமிருந்து சொற்செறிவு வழங்கப்பட்டுள்ளது. அப்போது நான் பெருநாள் தொழுகைக்குப் பிறகு, அரபு மொழியில் பெருநாள் உரை நிகழ்த்துவதற்காக எழுந்து நின்று விட்டேன். இறைவன் அறிவான், மறைவில் இருந்து எனக்கு ஓர் ஆற்றல் வழங்கப்பட்டது. மேலும், அந்த சொற்செறிவு மிக்க உரை அரபி மொழியில் உடனுக்குடன் எனது நாவிலிருந்து வந்து கொண்டிருந்தது. அது எனது ஆற்றலுக்கு முற்றிலும் அப்பாற்பட்டதாக இருந்தது. பல பாகங்கள் வரை விரிவடைந்ததாக இருந்த இது போன்ற ஒரு சொற்பொழிவை, இந்த அளவு சொற்செறிவுடனும் சொல்லாட்சியுடனும், முதலில் ஒரு தாளில் எழுதாமல், உலகின் எந்த மனிதராலும் சிறப்பான இறையறிவிப்பின்றி எடுத்துரைக்க முடியாது என்று நான் கருதுகிறேன். குத்பா இல்ஹாமியா என்று பெயர் வைக்கப்பட்டுள்ள இந்த அரபி சொற்பொழிவு மக்கள் முன் நிகழ்த்தப்பட்ட போது, அந்த நேரத்தில் வருகை தந்திருந்தவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 200-க்கு அருகில் இருக்கும். சுப்ஹானல்லாஹ்! அப்பொழுது மறைவான ஒரு நீரூற்று வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. நான் பேசுகிறேனா அல்லது என் நாவில் இருந்து ஒரு வானவர் உரையாடுகிறாரா என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், இந்த உரையில் எனது தலையீடு இல்லை என்பதை நான் அறிந்திருந்தேன். வடிவமைக்கப்பட்ட வரிகள் தானாகவே என் நாவிலிருந்து வெளி வந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு வரியும் எனக்கு ஓர் அடையாளமாக இருந்தது. ஆக, அனைத்து வரிகளும் அச்சிடப்பட்டு உள்ளன..........

இவ்வளவு நீளமான உரையை சிந்திக்காமலும் கவனம் செலுத்தாமலும், நின்று கொண்டு அரபு மொழியில் உடனுக்குடனாக மட்டும் எடுத்துரைக்க முடிந்தவாறு, ஒரு மனிதனுக்கு ஆற்றல் இருக்கிறதா என்பது இந்த நூலைப் படிப்பதன் மூலம் தெரிய வரும். இது இறைவன் காட்டிய ஒரு மகத்துவமிக்க அறிவுசார் அற்புதம் ஆகும். எவராலும் இதற்கு இணையானதை முன் வைக்க முடியாது. (ஹக்கீக்கதுல் வஹீ, ருஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 375,376)


வழக்கத்திற்கு மாற்றமான, சிந்தனையை வியக்கச் செய்கின்ற அற்புதத்தின் அடையாளத்தின் மகத்துவம், இதை இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது இன்னும் அதிகரித்து விடுகிறது: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எத்தகைய ஒரு நாட்டில் வசித்து வந்தார்கள் என்றால், அதில் அரபு மொழி பொது மக்களின் மொழியாக இருக்கவில்லை. சுயமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஒருபோதும் முறையாக எந்தவொரு மதரஸாவிலோ அல்லது பள்ளிக்கூடத்திலோ அல்லது எந்த நிறுவனத்திலோ அரபுக் கல்வியைக் கற்கவில்லை.

மேலும், அன்னார் ஒருபோதும் எந்த அரபு நாட்டுக்கும் சென்றதில்லை. இதற்கு முன்னர் அன்னார் ஒருபோதும் அரபு மொழியில் உரை நிகழ்த்தியதுமில்லை. திடீரென்று இறை கட்டளைளைப் பின்பற்றிய வண்ணம் அன்னார் இந்தப் பெருநாள் உரையை யோசிக்காமலேயே வாய்மொழியாக நிகழ்த்தினார்கள்.

அன்னாரது கையில் எந்த எழுத்துப் பிரதியும் இருக்க -வில்லை. ஐயமின்றி, இது வல்ல இறைவனின் எத்தகைய நிகரற்ற அற்புதமும் தனிச்சிறப்பான அடையாளமும் என்றால், உலக வரலாற்றில் இதற்கு நிகர் கிடைப்பதில்லை!

## இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்

ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆன்மிகத்தால் நிறைந்த எந்த அறிவுக் கூற்றைத் தமது புனித சொத்தாக விட்டுள்ளார்களோ, அதன் உலகளாவிய அருள் முழு உலகையும் சூழ்ந்துள்ளது. அதன் தூய தாக்கங்களின் தோற்றம் உலகின் எல்லைகளில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அன்னாரது மற்றோர் உலகப் புகழ்பெற்ற உரையான 'இஸ்லாமிய போதனை -களின் தத்துவ ஞானம்' என்ற நூலின் உதாரணத்தை எடுத்துக் கொள்கிறேன்.




மறைவான விஷயங்களை அதிகம் அறிந்தவனும், எல்லாம் வல்லவனுமான இறைவன் முன்னரே அன்னாருக்கு இவ்வாறு நற்செய்தி வழங்கியிருந்தான்:

“மஸ்மூன் பாலா ரஹா - கட்டுரை மேலானதாக இருந்தது.”

1896-இல் லாஹூரில் ஒரு மகத்துவமிக்க மாபெரும் சர்வ சமய மாநாடு நடத்தப்பட்டது. இதில் ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட ஐந்து முக்கிய கேள்விகளுக்கும், இறைவனால் வழங்கப்பெற்ற அகப்பார்வையால் எந்த அளவு உன்னதமான முறையில் பதில்களை எடுத்துரைத்தார்கள் என்றால், முன் இருந்தவர்கள் தங்களுடைய தலை மீது பறவைகள் அமர்ந்திருப்பது போன்று மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இதுபோன்ற சொற்பொழிவை வாழ்நாள் முழுவதும் கேட்டதில்லை என்று பெரும் பெரும் சொல் வண்மை உடையவர்கள் கூறி வந்தார்கள். பத்திரிகைகள், இந்தக் கட்டுரை மேலானதாக இருந்தது என்று பகிரங்கமான எழுதியுள்ளன. (உரையாடல்களைக்) கேட்க வந்திருந்த -வர்கள் வற்புறுத்தியதன் பேரில் நிர்வாகம் மாநாட்டை இன்னொரு நாள் நீட்டித்தது. சொற்பொழிவாளர் ஒருவர், இந்தக் கட்டுரை முழுமையாக வாசித்துக் காட்டப்படும் பொருட்டு, தனது சொற்பொழிவின் நேரத்தை இந்த சொற்பொழிவுக்காக் கொடுத்து விட்டார்.




ஆக, இறையாதரவால் எழுதப்பட்ட இந்த இறைஞானமிக்க, அற்புதமான சொற்பொழிவு இன்றும் அறிவு மற்றும் இறைஞானத்தின் என்றும் தீராத ஒரு கருவூலமாக மார்க்க உலகின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களின் பட்டியலில் இணைந்துள்ளது. இதுவரை உலகின் பிரசித்திபெற்ற 55 மொழிகளில் இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டு விட்டது. இந்த அறிவுசார் அற்புதத்தின் நல்ல தாக்கங்கள் இன்றும் முழு உலகிலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. உலகின் மூலை முடுக்குகளில் முஸ்லிம் அல்லாதவர்களின் உள்ளங் -களை ஒளியால் ஒளிரச் செய்கிறது.

வரலாறு கூறுகிறது: “இந்தக் கட்டுரை மாநாட்டில் வாசித்துக் காட்டப்பட்ட போது, அந்தக் கூட்டத்தின் அவைத் தலைவராக ஓர் இந்து இருந்தார். அவருடைய நாவிலிருந்து அவரையும் அறியாமல், இந்தக் கட்டுரை அனைத்துக் கட்டுரைகளைக் காட்டிலும் மேலானதாக இருந்தது என்ற சொல் வந்து விட்டது.” (ஹக்கீக்கதுல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 291)

இந்த மகத்துவமிக்க அற்புதமான நூல் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான ஓர் எடுத்துக்காட்டை மாதிரிக்காக முன் வைக்கிறேன். இந்த நூலின் நேசர்களின் பட்டியலில் பஷீர் அஹ்மது ஆர்சர்ட் அவர்களின் பெயர் முதல் வரிசையில் இருக்கும். இவர்கள் பர்மா போர் முனையில் பிரித்தானியப் படையில் தொண்டாற்றி வந்தார்கள். மிகவும் நல்லுள்ளம் படைத்த மனிதராக இருந்தார்கள். ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தி இவர்களின் காதுகளில் விழுந்தது. நீண்ட பயணம் மேற்கொண்டு காதியானுக்கு சென்றார்கள். அங்கு இவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்பட்டு விட்டது. அஹ்மதிய்யத்தின் ஒளியால் ஒளிபெற்றார்கள்.

இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் இவர்களுக்கு மிகவும் பிடித்தமான நூலாகி விட்டது. தினமும் உறங்குவதற்கு முன்பு இந்த நூலைத் தலையணைக்குக் கீழிருந்து எடுப்பார்கள். சில பக்கங்கள் படித்த பிறகு, உறங்கி வந்தார்கள். இது இவர்களின் வாழ்நாள் முழுவதும் வழக்கமாகி விட்டது. அவர்கள் இந்த ஆன்மிகக் கருவூலமான நூலை நேசிக்கக்கூடியவராக இருந்தார்கள். தொடர்ச்சியாக இந்த நூலை வாசிப்பார்கள். ஒருமுறை நான் இவர்களிடம், ‘நீங்கள் எத்தனை முறை இந்த நூலை வாசித்திருக்கிறீர்கள்?’ என்று கேட்டேன். தமது பணிவின் காரணமாக இவர்கள் பதில் அளிக்கவில்லை. நான் வற்புறுத்தியதும், ‘நான் குறைந்தது 50 முறை இந்த நூலைப் படித்து விட்டேன். மேலும், இந்தத் தொடர் தொடர்கிறது. இறுதி மூச்சு வரை தொடரும்’ என்று கூறினார்கள்.

## மொழியாக்கங்களின் தனிச்சிறப்பான மேன்மை

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவுசார் அற்புதங்கள் தொடர்பாக, வழக்கத்திற்கு மாற்றமான, தனிச்சிறப்பு மிக்க ஒரு விஷயம் இதுவாகும்: அன்னார் அல்லாஹ்வின் உதவி, ஆதரவுடன் முழு உலகிற்கும் நேர்வழி காட்டுவதற்காக எழுதிய நூல்கள் அல்லது வழங்கிய வழிகாட்டல்கள் உருது மொழி வரை மட்டுமே எல்லைக்குட்பட்டதாக இருந்து விடவில்லை. அதையும் தாண்டி அல்லாஹ்வின் மிகச் சிறப்பான கொடையால் உலகின் பல்வேறு மொழிகளில் இவை மொழிபெயர்க்கப் -பட்டு விட்டன. மிக வேகமாக பரவுகின்றன. பார்க்கப் போனால், இது வழக்கத்திற்கு மாற்றமான ஒரு கண்ணியமும் தனிச்சிறப்பும் ஆகும். அதை அல்லாஹ் ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நிகரற்ற அறிவுக் கூற்றிற்கு வழங்கியுள்ளான்.

எடுத்துக்காட்டாக சிலவற்றை முன் வைக்கிறேன்: அன்னாருடைய அனைத்து நூல்கள் மற்றும் மல்ஃபூஸாத்தின் முழுமையான மொழியாக்கம் அரபி மற்றும் ஜெர்மன் மொழிகளில் செய்யப்பட்டு விட்டன. இது மட்டுமின்றி, பல்வேறு நூல்கள் ஆங்கிலம் மற்றும் ஃபிரெஞ்சு மொழிகளில் மட்டுமின்றி, வெகு தொலைவில் இருக்கும் நாடுகளின் பிரிசித்தி பெற்ற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு விட்டன. இந்தத் தொடர் வேகமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.

காதியான் எனும் ஒரு பெயர் தெரியாத சிற்றூரில் பிறந்த இறைத்தூதரின் தூதுச் செய்தி, அவருடைய சொற்களி -லேயே உலகின் எல்லைகள் வரை சென்றடைந்து விட்டதே! இந்தத் தனிச்சிறப்பு ஒப்பற்றது இல்லையா? மேலும், முழு உலக மக்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

அவர்களின் உயிரூட்டும் தூதுச் செய்தியால் பலர் ஒளிரப் பெறுகிறார்கள். அன்னாருடைய எழுத்துகளுக்குக் கிடைத்த வழக்கத்திற்கு மாற்றமான இந்தத் தனிச்சிறப்பு அன்னாரது மகத்துவம் மற்றும் அன்னாருக்கு இருக்கும் இறையுதவி மற்றும் ஆதரவிற்குப் பேசும் சான்றாகும். மேலும், இந்த இறையறிவிப்பையும் நிறைவேற்றக் கூடியதாகும்:

میں تیری تبلیغ کو زمین کے کناروں تک پہنچاؤں گا

நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன்.

இன்று அல்லாஹ்வின் அருளால் உலகின் 213 நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டு விட்டது. அல்ஹம்துலில்லாஹ்

گر نہیں عرش معلّی سے یہ ٹکراتی تو پھر
سب جہاں میں گو نجتی ہے کیوں صدائے قادیاں

இது உயர்வான அரியணையில் சென்று மோதவில்லை என்றால், பிறகு, ஏன் முழு உலகிலும் காதியானின் குரல் ஒளிக்கிறது.

## கருத்து வேறுபாடான விஷயங்களுக்கு அற்புதமான தீர்ப்பு

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றியபோது, அப்பொழுது முழு உலகிலும் இருந்த முஸ்லிம்கள் கருத்து வேறுபாடான பல விஷயங்களில் உழன்று கொண்டிருந்தார்கள். அவற்றில் முதல் வரிசையில் கத்மே நுபுவ்வத்தின் உண்மைத்துவம், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் வாழ்வு மற்றும் மரணம் போன்ற விவகாரங்கள் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுபவர்களின் மோதலுக்குக் காரணமாக ஆகியிருந்தன.

இந்த சூழலில் அல்லாஹ்விடமிருந்து அறிவையும் வழிகாட்டலையும் பெற்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்விரு விவகாரங்களிலும் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸில் இருந்து எத்தகைய அற்புதமான சான்றுகளை முன் வைத்தார்கள் என்றால், நற்பேறு பெற்ற மக்களுக்கு உண்மை வெளிப்பட்டு விட்டது. சரியான இஸ்லாமிய கோட்பாடுகள் எவ்வளவு அழகாக முன் வந்தனவென்றால், ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்கள் நேர்வழியைப் பெற்றனர். மார்க்க உலகில் ஓர் அற்புதமான புரட்சி ஏற்பட்டு விட்டது. நான் எடுத்துக்காட்டாகக் கூறிய இந்த இரு விவகாரங்கள் மிகவும் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டியவை. அதற்கு இந்த சந்தர்ப்பத்தில் நேரமில்லை.

சுருக்கமாக இவ்வளவு கூறுவது போதுமானதாக இருக்கும். அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கத்மே நுபுவ்வத் விவகாரத்தில் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் இருந்து, வாயடைக்கச் செய்யக்கூடிய, உறுதியான எத்தகைய சான்றுகளை அறிவுப்பூர்வமான நூல்களில் எடுத்துரைத்துள்ளார்கள் என்றால், அவற்றால் நல்லியல்பு கொண்ட மக்களின் கண்கள் திறந்து விட்டன. அவர்கள் உண்மையான உள்ளத்துடன் நேர்வழியை ஏற்றுக் கொண்டார்கள்.

அன்னாருடைய இந்த அற்புதமான படைப்புகள் இன்றும் உண்மையைத் தேடுபவர்களுக்கு ஒளிதரும் மினாராக்கள்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

1) நான் திருக்குர்ஆனின் அற்புதங்களின் நிழலில் அரபியின் சொற்செறிவு மற்றும் சொல்லாட்சியின் அடையாளம் வழங்கப் பெற்றுள்ளேன். எவராலும் இதில் எதிர்த்துப் போட்டியிட முடியாது.

2) நான் திருக்குர்ஆனின் உண்மைகள் மற்றும் இறைஞானங்களை எடுத்துரைக்கும் அடையாளம் வழங்கப் பெற்றுள்ளேன். எவராலும் இதில் எதிர்த்துப் போட்டியிட முடியாது.

ஆகும். இது தொடர்பாக அன்னாருடைய அறிவுப்பூர்வமான கூற்றுகளை உள்ளடக்கிய ஒரு நூல் 'அல் கவ்லுல் முபீன்' ஆகும். அதை பாகிஸ்தானின் அஸம்பளியில் கேள்வி பதிலின் போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மனுவுடன் சேர்த்து சமர்ப்பித்தார்கள். ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களின் வஃபாத் தொடர்பாக ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உலகப் புகழ்பெற்ற தமது நூல் 'இஸாலாயே அவ்ஹாம்' இல் அல்லாஹ்வின் வழிகாட்டலின்கீழ் திருக்குர்ஆனின் 30 வசனங்களை எடுத்து வைத்தார்கள். மேலும், இந்த விவகாரத்தை எந்த அளவுக்குத் தெளிவுபடுத்தி விட்டார்கள் என்றால், முகந்திருப்பிச் செல்வதற்கு எந்த இடமும் எஞ்சியிருக்கவில்லை. இது அன்னாரது ஓர் அற்புதமான அருஞ்செயலாகும். அதை உண்மையை விரும்பும் எவரும் ஒருபோதும் கண்டும் காணாமல் இருக்க முடியாது.

'தவஃப்பீ' என்ற சொல் தொடர்பாக ஹஸ்ரத் தூய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று முழு உலகிற்கும் இவ்வாறு சவால் விடுத்தார்கள்: எவ்வாறு எந்த நிபந்தனைகளுடன் இந்தச் சொல் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதோ அதன் பொருள் ஒருபோதும் ஒருபோதும் மரணத்தைத் தவிர, வேறு எதுவும் இருக்க முடியாது.

அன்னார் இது தொடர்பாக இந்தியா மற்றும் முழு உலகின் அரபி அறிந்தவர்களையும் போட்டிக்கு அழைத்தார்கள். அதாவது, அவர்கள் திருக்குர்ஆன் அல்லது நபிமொழிகளில் இருந்து, தவஃப்பீ என்ற சொல்லுக்கு மரணம் என்பதைத் தவிர வேறு ஏதாவது மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டையாவது முன் வைக்க வேண்டும். 150 ஆண்டு கால வரலாறு சாட்சியாக இருக்கிறது. எந்த அரேபியராலும் அல்லது அரேபியர் அல்லாதவராலும் ஓர் எடுத்துக்காட்டைக் கூட எடுத்து வைக்க முடியவில்லை. ஒருபோதும் எடுத்து வைக்கவும் முடியாது.

ஏனென்றால், இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று எடுத்துரைத்த உறுதியான உண்மை ஆகும். இந்த சவால் இன்றும் நிலைபெற்றுள்ளது. மேலும், என்றென்றும் நிலைபெற்றிருக்கும். எவராலும் இதைத் தவறானதாக நிரூபிக்க முடியாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட இந்த அறிவுசார் அற்புதம் அன்னாருடைய உண்மைக்கு ஒரு பசுமையான சான்றாகும்.

(தொடரும்...)

# ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்




ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

உண்மையான மார்க்கத்தையும், பொய்யான மார்க்கத்தையும் பிரித்தறிவதற்காக, பூமியில் இருக்கும் வித்தியாசத்தை அதாவது எந்த விஷயங்களுக்கு அறிவு மற்றும் பகுத்தறிவின் மூலமாக தீர்ப்பு கிடைக்க முடியுமோ - அவற்றை ஓரளவுக்கு இந்த இடத்தில் நான் எழுதி இருக்கிறேன். ஆனால், வானத்தின் மூலமாகத் திறக்கின்ற வித்தியாசமும் எத்தகைய அவசியமானது என்றால், அது இல்லாமல் உண்மை மற்றும் பொய்யிற்கு இடையில் தெளிவான வித்தியாசம் கிடைக்க முடியாது. மேலும் அது என்னவென்றால், உண்மையான மார்க்கத்தை முழுமையாகப் பின்பற்றுபவர்களுடன் இறைவனின் ஒரு சிறப்பான தொடர்புகள் ஏற்பட்டு விடுகின்றன. மேலும் முழுமையாக பின்பற்றுகின்ற அவர் தன்னால் பின்பற்றப்படுகின்ற நபியின் தோற்றமாகவும், அவருடைய ஆன்மிக நிலைமைகளின், அகத்தின் அருள்களின் ஒரு முன்மாதிரியாகவும் ஆகி விடுகின்றார். மேலும் மகன் இடையில் இருப்பதன் காரணத்தால், பேரனும் மகன் என்று அழைக்கப்படுவதைப் போன்றே, எவர் நபியைப் பின்பற்றுதல் என்ற நிழலில் வளர்ந்தவராக இருக்கின்றாரோ, அவருடனும் நபியுடன் இருக்கும் அதே கருணையும், அருளும் இருக்கிறது. மேலும் நபிக்கு அடையாளங்கள் காட்டப்படுவதைப் போன்றே, அவருக்கு சிறப்பான முறையில் இறைஞானத்தை அதிகமாக்குவதற்காக அவருக்கும் அடையாளங்கள் கிடைக்கின்றன.

எனவே அப்படிப்பட்ட மக்கள் எந்த உண்மையான மார்க்கத்தின் ஆதரவுக்காக தோன்றுகிறார்களோ அதன் உண்மைக்கு அவர்கள் உயிருள்ள அடையாளங்களாக இருக்கின்றனர். இறைவன் வானத்திலிருந்து அவர்களுக்கு ஆதரவு அளிக்கிறான். மேலும் அவர்களின் துஆக்களை அதிகமாக ஒப்புக் கொள்கிறான். மேலும் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான தகவலை வழங்குகிறான். அவர்களுக்குத் துன்பங்களும் இறங்குகின்றன. ஆயினும் அவை அவர்களை அழிப்பதற்காக இறங்குவதில்லை. மாறாக, இறுதியில் அவற்றின் சிறப்பான ஆதரவினால் வல்லமையின் அடையாளம் வெளிப்படுத்தப்படுவதற்காக (அவர்களுக்குத் துன்பங்கள்) இறங்குகின்றன. இறைவனின் சிறப்பான வேலை அவர்களிடம் வெளிப்படுவதற்காக அவர்கள் கண்ணியக் -குறைவு ஏற்பட்ட பிறகு மீண்டும் கண்ணியத்தைப் பெற்று விடுகின்றனர். மரணித்த பிறகு மீண்டும் உயிர் பெற்று விடுகின்றனர்.

இந்த இடத்தில், துஆ கபூல் ஆவது (அங்கீகாரம் பெறுவது) இரண்டு வகையில் நடக்கிறது என்ற இந்த நுண்ணிய கருத்து நினைவில் கொள்ளத்தக்கதாகும். ஒன்று, சோதனை என்ற முறையில் ஒப்புக் கொள்ளப்படுதல். இன்னொன்று, தேர்ந்தெடுத்தல் என்ற முறையில் ஒப்புக் கொள்ளப்படுதல். சோதனை என்ற முறையில் ஒப்புக் கொள்ளப்படுதல் என்பதோ, பாவம் செய்தவர்களின், கட்டுப்படாதவர்களின், இன்னும் கூறுவதென்றால், கா∴பிர்களின் துஆவும் எப்போதாவது ஒப்புக்கொள்ளப்பட்டு விடுகின்றது. ஆனால் அப்படி ஒப்புக் கொள்ளப்படுவது உண்மையான கபூலிய்யத்தைக் (ஒப்புக் கொள்ளப்படுவதைக்) குறிப்பிடுவதாக இருப்பதில்லை. மாறாக, அது வழக்கத்தை விட மேம்பட்ட ஷைத்தானுடைய வேலையின் வகையைச் சேர்ந்ததாகவும், சோதனைக்காகவும் ஒப்புக் கொள்ளப்படு -கிறது. ஆனால் தேர்ந்தெடுத்தல் என்ற முறையில், துஆ ஒப்புக் கொள்ளப்படுவதில் துஆ செய்பவர் இறைவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களைச் சேர்ந்தவராக இருப்பதும், நாலாப்புறமிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் ஒளிகளும், அடையாளங்களும் அவரிடம் வெளிப்பட வேண்டும் என்பதும் நிபந்தனையாகும். ஏனெனில் இறைவன் உண்மையான கபூலிய்யத் (ஒப்புக் கொள்ளுதல்) என்ற முறையில் கீழ்ப்படியாதவர்களின் துஆவை ஒருபோதும் கேட்க மாட்டான். மாறாக, தனது பார்வையில் நேர்வழி பெற்றவர்களுடைய, அவனது கட்டளைகளின்படி நடக்கின்றவர்களுடைய துஆக்களையே கேட்கின்றான்.

எனவே துஆக்கள் சோதனையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்டவரின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், எந்த துஆ சோதனைக்காக ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அதில் இறையச்சம் கொண்டவர், இறை நட்பு கொண்டவர் ஆக இருப்பது நிபந்தனை அல்ல. மேலும் அதில் இறைவன் துஆவை ஒப்புக் கொண்டு தனது சிறப்பான கூற்றின் மூலமாக அது கபூல் ஆவதற்கான செய்தியையும் கொடுக்க வேண்டும் என்பது தேவையில்லை. மேலும் அந்த துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு ஓர் அதிசயமானதாகவும், வழக்கத்திற்கு அப்பாற்பட்டதாகவும் கருதும் அளவுக்கு உயர்ந்தவையாக இருப்பதுமில்லை. ஆனால் எந்த துஆக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக அங்கீகரிக்கப்படுகின்றனவோ அவற்றில் (கீழ்வரும்) இந்த (ஐந்து) அடையாளங்கள் வெளிப்படையாக இருக்கின்றன:

1. ஒன்று, துஆ செய்கின்றவர் ஓர் இறையச்சமுடையவராகவும், நேர்மையானவராகவும், முழுமையானவராகவும் இருக்கின்றார்.

2. இரண்டு, இறைவனுடன் உரையாடல்களின் மூலமாக அந்த துஆ கபூல் (அங்கீகாரம்) ஆவதற்கான அறிவிப்பு வழங்கப்படுகிறது.

3. மூன்று, ஒப்புக் கொள்ளப்படும் பெரும்பாலான அந்த துஆக்கள் மிகவும் உயர்தரமான, சிக்கலான வேலைகளைப் பற்றியதாக இருக்கின்றன. அவை அங்கீகரிக்கப்படுவதால், இது மனிதனுடைய வேலையும், திட்டமும் அல்ல. மாறாக, இறைவனின் சிறப்பான வல்லமையின் முன்மாதிரியாகும் அது குறிப்பிட்ட அடியார்களுக்கு வெளிப்படுகிறது என்பது தெளிவாகி விடுகிறது.

4. நான்கு, சோதனைக்கான துஆக்களோ எப்போதாவது மிக அரிதாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் துஆக்கள் அதிகமாக அங்கீகரிக்கப்படுகின்றன. சில நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் துஆவில் எப்படிப்பட்ட மாபெரும் கஷ்டங்களில் சிக்கிக் கொள்கின்றார்கள் என்றால், அவற்றில் வேறொருவர் சிக்கிக் கொண்டார் என்றால் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு தற்கொலையைத் தவிர வேறு எந்த வழியும் ஒருபோதும் அவருக்குத் தெரியாது. அதன்படி, அவ்வாறு நடக்கவும் செய்கின்றது. இறைவனை கைவிட்டும், இறைவனிடமிருந்து வெகு தொலைவிலும் இருக்கும் உலகவாதிகள் சில மாபெரும் துயரங்களிலும், துக்கங்களிலும், நோய்களிலும், வியாதிகளிலும், அவிழ்க்க முடியாத முடிச்சுகளிலும் சிக்கிக் கொள்ளும்போதெல்லாம் இறுதியில் அவர்கள் ஈமானின் பலவீனத்தால் இறைவனிடம் இருந்து அவநம்பிக்கை கொண்டு ஏதாவது ஒரு விஷத்தைக் குடித்து விடுகின்றனர். அல்லது கிணற்றில் விழுகின்றனர். அல்லது துப்பாக்கியால் தற்கொலை செய்து கொள்கின்றனர். ஆனால் அப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களுக்கு அவர்களின் ஈமானின் உறுதி, (இறைவனுடன் இருக்கும்) சிறப்பான தொடர்பு ஆகியவற்றின் காரணமாக இறைவனிடமிருந்து வியப்பிலும் வியப்பான உதவி வழங்கப்படுகிறது. மேலும் இறைவனின் உதவி அற்புதமான முறையில் அவருடைய கையைப் பற்றிப் பிடித்துக் கொள்கின்றது. எதுவரை என்றால், இரகசியத்தை அறிந்த ஒருவரின் உள்ளம் தன்னையுமறியாமல், இந்த மனிதர் இறைவனால் உதவி செய்யப்பட்டவர் என்று கூறுகிறது.

5. ஐந்து, இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவருடைய துஆவின் தங்குமிடம் இறைவனின் அருள்களாக இருக்கின்றது. மேலும் இறைவன் அவருடைய எல்லா வேலைகளிலும் அவருக்குப் பாதுகாப்பாளனாக ஆகி விடுகின்றான். இறைவன் மீதுள்ள அன்பு எனும் ஒளி, ஒப்புக் கொள்ளப்பட்ட பெருமிதத்தில் தோய்ந்திருத்தல், ஆன்மிக இன்பங்களைப் பெறுதல், அருளின் அடையாளங்கள் ஆகியவை அவருடைய முகத்தில் வெளிப்படுகின்றன. அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

تَعۡرِفُ فِیۡ وُجُوۡهِهِمۡ نَضۡرَۃَ النَّعِیۡمِ ۔ اَلَاۤ اِنَّ اَوۡلِیَآءَ اللّٰهِ لَا خَوۡفٌ عَلَیۡهِمۡ
وَلَا هُمۡ یَحۡزَنُوۡنَ ۔ اَلَّذِیۡنَ اٰمَنُوۡا وَکَانُوۡا یَتَّقُوۡنَ ۔ لَهُمُ الۡبُشۡرٰی فِی الۡحَیٰوۃِ الدُّنۡیَا
وَفِی الۡاٰخِرَۃِ ؕ لَا تَبۡدِیۡلَ لِکَلِمٰتِ اللّٰهِ ؕ ذٰلِکَ هُوَ الۡفَوۡزُ الۡعَظِیۡمُ ۔ اِنَّ الَّذِیۡنَ
قَالُوۡا رَبُّنَا اللّٰهُ ثُمَّ اسۡتَقَامُوۡا تَتَنَزَّلُ عَلَیۡهِمُ الۡمَلٰٓئِکَۃُ اَلَّا تَخَافُوۡا وَلَا تَحۡزَنُوۡا
وَاَبۡشِرُوۡا بِالۡجَنَّۃِ الَّتِیۡ کُنۡتُمۡ تُوۡعَدُوۡنَ ۔ نَحۡنُ اَوۡلِیٰٓؤُکُمۡ فِی الۡحَیٰوۃِ الدُّنۡیَا وَفِی
الۡاٰخِرَۃِ ۚ وَلَکُمۡ فِیۡهَا مَا تَشۡتَهِیۡۤ اَنۡفُسُکُمۡ وَلَکُمۡ فِیۡهَا مَا تَدَّعُوۡنَ ۔
وَاِذَا سَاَلَکَ عِبَادِیۡ عَنِّیۡ فَاِنِّیۡ قَرِیۡبٌ ؕ اُجِیۡبُ دَعۡوَۃَ الدَّاعِ اِذَا دَعَانِ
فَلۡیَسۡتَجِیۡبُوۡا لِیۡ وَلۡیُؤۡمِنُوۡا بِیۡ لَعَلَّهُمۡ یَرۡشُدُوۡنَ ۔

மஹ்பூபிய்யத் (நேசத்திற்குரியவராகுவது), கபூலிய்யத் (ஒப்புக் கொள்ளப்படுவது), உண்மையான இறைநட்பு ஆகியவற்றின் அந்தஸ்தைப் பெறுவது பற்றி ஓரளவுக்கு சுருக்கமாக விளக்கி விட்டேன் என்பதை இப்போது அறிந்து

(மேலே உள்ள வசனங்களின் கருத்து மொழியாக்கம்:) நீர் அவர்களின் முகங்களில் பேரின்பச் செழிப்பைக் காண்பீர். (83:25). எச்சரிக்கையாக இருங்கள். அதாவது எவர்கள் அல்லாஹ்வின் நண்பர்களாக இருக்கின்றார்களோ அதாவது எவர்கள் இறைவனிடம் உண்மையான அன்பு வைத்திருக்கின்றார்களோ அவர்களுடன் இறைவன் உண்மையான அன்பு வைத்திருக்கிறான். அவர்களின் அடையாளங்களாக இருப்பவை என்னவெனில், என்ன சாப்பிடுவோம் என்ன அருந்துவோம் அல்லது இந்த சோதனையிலிருந்து எவ்வாறு ஈடேற்றம் கிடைக்கும் என்ற அச்சம் அவர்களை மேலோங்கி இருக்காது. ஏனெனில் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கப்படுகிறது. மேலும் அவர்களுக்கு சென்ற காலத்தைப் பற்றி எந்த வருத்தமும், கவலையும் இருக்காது. ஏனெனில் அவர்களுக்கு பொறுமை வழங்கப்படுகிறது.

இரண்டாவது அடையாளம், அவர்கள் ஈமான் கொள்கின்றனர். அதாவது ஈமானில் முழுமையானவர்களாக இருக்கின்றனர். மேலும் இறையச்சத்தை மேற்கொள்கின்றனர். அதாவது, ஈமானுக்கு மாற்றமான, கட்டுப்படுவதற்கு மாற்றமான விஷயங்களிலிருந்து மிகவும் தொலைவில் இருக்கின்றனர்.

அவர்களின் மூன்றாவது அடையாளம், அவர்களுக்கு (இறைவனின் உரையாடல்கள், உண்மையான ஆன்மிகக் கனவுகள் மூலமாக) இவ்வுலகிலும், மறுவுலகிலும் நற்செய்திகள் கிடைக்கின்றன. அவர்களைப் பற்றி இறைவனுடைய இந்த வாக்குறுதி நீங்க முடியாது. அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற அன்பிற்குரிய அந்தஸ்து இதுவேயாகும். அதாவது, இறைவனின் நண்பர்களாக இருக்கும் அவனது சிறப்பான அடியார்களுக்கு இறைவனுடன் உரையாடுவது, நல்ல ஆன்மிகக் காட்சிகள் காண்பது ஆகியவற்றிலிருந்து கண்டிப்பாக பங்கு கிடைக்கிறது. மேலும் அவர்களுக்கு இறைவனுடன் இருக்கும் நட்புக்கான பெரிய அடையாளம், அவர்கள் இறைவனுடன் உரையாடுவது, பேசுவது என்ற பண்புகளால் சிறப்பிக்கப்படுகின்றனர் என்பதே ஆகும். (இதுவே அல்லாஹ்வின் இயற்கைச் சட்டமாகும்). எவர்கள் பல்வேறுபட்ட கடவுளர்களிடமிருந்து முகத்தைத் திருப்பி, அல்லாஹ்வை தனது படைப்பாளனாகக் கருதுகிறார்களோ,நமக்கோ

கொள்ள வேண்டும். அவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் ஒருபோதும் கிடைக்க முடியாது. மேலும் ஓர் உண்மையான கீழ்ப்படிக்கின்றவருக்கு எதிரில் எந்த கிறித்தவராவது அல்லது ஆரியராவது அல்லது யூதராவது ஒப்புக் கொள்ளப்பட்டதற்கான அடையாளங்களையும், ஒளிகளையும் காட்ட விரும்பினால் அது அவருக்கு ஒருபோதும் முடியாது. அதை சோதித்துப் பார்ப்பதற்கான தெளிவான வழிமுறை என்னவென்றால், உண்மையான முஸ்லிமாகவும், உண்மையாகவே நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவராக இருக்கின்றவருமாகிய ஒரு நல்ல முஸ்லிமுக்கு எதிராக கிறித்தவரைப் போன்ற இன்னொருவர் போட்டியாக நின்று, உங்களுக்கு எந்த அளவுக்கு வானத்திலிருந்து ஏதாவது அடையாளம் காட்டப்படுமோ அல்லது எந்த அளவுக்கு மறைவான இரகசியங்கள் உங்களுக்குக் திறக்கப்படுமோ அல்லது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதால் எந்த அளவுக்கு உங்களுக்கு உதவி செய்யப்படுமோ அல்லது உங்களின் கண்ணியம் மற்றும் சிறப்பை வெளிப்படுத்துவதற்காக எந்த வகையில் வல்லமையின் ஒரு முன்மாதிரி காட்டப்படுமோ அல்லது சிறப்பான இறையருட்கொடைகள் உங்களுக்கு முன்னறிவிப்பாக வழங்கப்படுமோ அல்லது உங்களுக்குத் துன்பம் கொடுக்கின்ற ஏதாவது எதிரிக்கு ஏதாவது எச்சரிக்கை இறங்குவதற்கான செய்தி வழங்கப்பட்டால், அந்த எல்லா விஷயங்களிலும் எதுவெல்லாம் உம்மிடமிருந்து வெளிப்படுமோ, எதையெல்லாம் நீர் வெளிப்படுத்திக் காட்டுவீரோ அதை நானும் வெளிப்படுத்திக் காட்டுவேன் என்று கூறினால் அப்படிப்பட்ட வாக்குவாதத்தை எந்த எதிரியாலும் ஒருபோதும் செய்ய முடியாது. மேலும் அவர் ஒருபோதும் போட்டிக்கு வர மாட்டார். ஏனெனில் நாம் முன்னரே ஓரளவுக்கு விளக்கிக் கூறியிருப்பது போன்று, அவர்கள் பெரும் பொய்யர்கள் என்று அவர்களின் உள்ளங்கள் சாட்சி பகர்கின்றன. நேர்வழி பெற்றவர்களுக்கு உதவியாளனாகவும், உண்மையாளர்களுக்கு நண்பனாகவும் இருக்கின்ற அந்த உண்மையான இறைவனுடன் அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை.

وَهٰذَا اٰخِرُ كَلَامُنَا وَالْحَمْدُ لِلّٰهِ اَوَّلًا وَّاٰخِرًا وَّظَاهِرًا وَّبَاطِنًا ۔ هُوَ مَوْلَانَا نِعْمَ الْمَوْلٰى وَنِعْمَ الْوَكِيْلُ

(பொருள்: இதுவே நமது இறுதி கூற்று ஆகும். மேலும் முதலிலும், இறுதியிலும், வெளிப்படையிலும், உட்புறத்திலும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் நமது எஜமானன் ஆவான். அவன் மிகச் சிறந்த எஜமானனும், மிகச் சிறந்த பாதுகாவலனும் ஆவான்).

(நிறைவுற்றது)

அல்லாஹ் ஒருவன் மட்டுமே படைப்பாளன் ஆவான் என்று கூறுகிறார்களோ (அதாவது வேறு எந்த ரூபுபிய்யத்தின் மீதும் நமக்குப் பார்வை இல்லை என்று கூறுகிறார்களோ). மேலும் சோதனைகளின் காலங்களில் உறுதியாக நிலைபெற்றிருந்தால் (எப்படிப்பட்ட பூகம்பங்கள் ஏற்பட்டாலும், சூறாவளிக் காற்றுகள் வீசினாலும், இருள்கள் பரவினாலும் அவற்றில் கொஞ்சமும் அதிர்ச்சியும், மாற்றமும், மனக் குழப்பமும் உருவாகாமல் முழுமையாக நிலைபெற்றிருப்பது இருந்தால்) அவர்கள் மீது மலக்குகள் இறங்குகின்றனர். (அதாவது இல்ஹாம் அல்லது நல்ல ஆன்மிகக் கனவுகள் மூலமாக அவர்களுக்கு நற்செய்திகள் கிடைக்கின்றன). உலகில் மற்றும் மறுமையில் நாம் உங்களுக்கு நண்பனாகவும், காப்பாளனாகவும், பாதுகாவலனாகவும் இருப்போம். மேலும் மறுமையில் உங்கள் உள்ளங்கள் விரும்பியவை எல்லாம் உங்களுக்குக் கிடைக்கும். அதாவது உலகில் ஏதாவது வெறுப்பிற்குரிய விஷயங்கள் ஏற்பட்டாலும் எந்த சந்தேகத்திற்கும் இடமில்லை. ஏனெனில் மறுமையில் எல்லா துக்கங்களும், துன்பங்களும் நீங்கி விடும். மேலும் எல்லா நோக்கங்களும் கிடைத்து விடும்.

மறுமையில் மனிதனின் உள்ளம் விரும்புவதெல்லாம் அவருக்கு எவ்வாறு கிடைக்க முடியும் என்று எவராவது கூறினால், அது ஏற்படுவது மிகவும் அவசியமாகும் என்று நான் கூறுவேன். மேலும் அதற்குப் பெயர்தான் ஈடேற்றம் என்பதாகும். இல்லையென்றால், மனிதன் ஈடேற்றம் பெற்று சில பொருள்களை விரும்பிக் கொண்டிருக்கிறான் என்றால், அவற்றைப் பற்றிய துக்கத்தில் எரிகிறான். ஆனால், அவை அவருக்குக் கிடைக்கவில்லை என்றால் பிறகு அது என்ன ஈடேற்றம்? ஒருவிதமான வேதனை அத்துடனேயே இருந்து வந்திருக்கிறதுதானே!

எனவே ஜன்னத் அல்லது சுவர்க்கம், முக்தி பெறும் இல்லம் அல்லது ஈடேற்றம் பெறும் இல்லம் என எந்தப் பெயர் அதற்கு வைக்கப்பட்டாலும் அது எல்லையற்ற நற்பேற்றிற்கான இல்லமாக இருப்பது கண்டிப்பானதாகும். அது எத்தகைய இல்லமாக இருக்க வேண்டும் என்றால், மனிதனுக்கு அதில் முழுமையான முறையில் தூய்மையான மகிழ்ச்சி கிடைக்க வேண்டும். மேலும் வெளிப்படையான அல்லது உட்புறமான எந்தத் துன்பமும் இடையில் இருக்கக் கூடாது. மேலும் எந்தத் தோல்விக்கான வேதனையும் உள்ளத்தில் மேலோங்கி இருக்கக் கூடாது.

ஆயினும் சுவர்க்கத்தில் தகுதியற்ற, பொருத்தமற்ற விஷயங்கள் இருக்காது என்பது உண்மையாகும். ஆனால் தூய உள்ளங்களில் அவற்றிற்கான ஆசையும் உருவாகாது. மாறாக, ஷைத்தானிய எண்ணங்களிலிருந்து தூய்மையாக்கப்பட்டிருக்கின்ற அந்த தூய, பரிசுத்தமான உள்ளங்களில் மனிதனுடைய தூய இயல்பு மற்றும் படைத்தவனின் தூய விருப்பத்திற்கேற்ப தூய விருப்பங்கள் உருவாகும். மனிதன் தனது வெளிப்படையான, உட்புறமான, உடல் அளவிலான, ஆன்மிக அளவிலான நற்பேற்றை முழுக்க முழுக்க பெற்றுக் கொள்வதற்காகவும், தனது எல்லா ஆற்றல்களும் முழுமையாக வெளிப்படுவதால் முழுமையான மனிதன் என்று அழைக்கப்படுவதற்காகவும் அவ்வாறு நடக்கும். ஏனெனில் சுவர்க்கத்தில் நுழைத்தல் என்பது நமது கிறித்தவ, ஆரிய எதிரிகள் நினைப்பது போன்று மனிதனிடத்தில் பதிந்துள்ளவற்றை அழிக்கும் நோக்கத்திற்காக அல்ல. மாறாக, மனித இயல்பின் அச்சுக்கள் வெளிப்படையாகவும், உட்புறமாகவும் முழுமையான முறையில் ஒளிர வேண்டும் என்பதற்காகவும், எல்லா சமன்பாடற்ற நிலைகளும் விலகி, மனிதனுக்கு மிகச் சரியாக வெளிப்படையான மற்றும் உட்புறமான படைப்பைப் பொருத்தவரை அவசியமாக இருக்கின்ற அந்த விஷயங்கள் வெளிப்பட வேண்டும் என்பதற்காகவும் ஆகும்.

பிறகு கூறினான்: (என்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட) எனது சிறப்பான அடியார்கள் என்னைப் பற்றிக் கேட்டால், எங்கிருக்கிறான் என்று வினவினால், நான் மிகவும் அருகில் இருக்கிறேன் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும். எனது கலப்பற்ற அடியார்களின் துஆக்களைச் செவியேற்கிறேன். எந்தவொரு கலப்பற்ற அடியார் துஆ செய்யும்போதும் (அது உள்ளத்தால் செய்தாலும் அல்லது நாவினால் செய்தாலும்) அதை செவியேற்கிறேன். (எனவே அதனால் நெருக்கம் வெளிப்படுகிறது). ஆனால் நான் அவர்களின் துஆக்களைக் கேட்கும் வகையில் அவர்கள் தமது நிலைமைகளை ஆக்கிக் கொள்ள வேண்டும். அதாவது மனிதன், தானே தன் மீது திரையிட்டுவிடும்போது, தூய நிலைமைகளை விட்டு வெகு தொலைவில் சென்று விடும்போது இறைவனும் அந்த மனிதனிடமிருந்து விலகி விடுகின்றான். எனவே என் மீதுள்ள உங்கள் ஈமானை நிரூபிக்க வேண்டும். (ஏனெனில் ஈமானிய ஆற்றலின் அருளால் துஆ சீக்கிரம் அங்கீகாரம் பெறுகின்றது). அவர்கள் அவ்வாறு செய்தால் நேர்வழியைப் பெற்றுக் கொள்வார்கள். அதாவது கண்ணியத்திற்குரியவனும், கம்பீரத்திற்குரியவனும் ஆகிய இறைவன் எப்போதும் அவர்களுடன் இருப்பான். மேலும் இறைவனின் உதவியும், இறைவனின் வழிகாட்டலும் அவர்களிடமிருந்து ஒருபோதும் விலகாது. எனவே துஆ கபூல் ஆவதும் (துஆ அங்கீகாரம் பெறுவதும்) அல்லாஹ்வின் நேசர்களுக்கு ஒரு பெரிய அடையாளமாகும்.

فَتَدَبَّرُ (எனவே சிந்தியுங்கள்) - நூலாசிரியர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து
எஸ்ஸென்ஸ் ஆ.:ப் இஸ்லாம்

தொகுதி 1

# இஸ்லாம் உண்மையான உயிருள்ள மார்க்கம்


அதிகாரம் 1

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்

## மார்க்கத்தின் குறிக்கோள்:

ஒரு மார்க்கத்தை கடைபிடிப்பதன் உண்மையான நோக்கம் என்னவெனில், இரட்சிப்பின் ஊற்றாகிய இறைவனை குறித்து ஒருவர் தனது கண்களாலேயே அவனை காண்பது போன்ற அளவிற்கான நிச்சய உறுதியை பெற்றுக் கொள்வதாகும். பாவத்தின் தீய ஆன்மா மனிதனை அழித்து விட முனைகிறது. குறைபாடுகளற்ற உயிருள்ள இறைவன் மீது முழு நிச்சய உறுதியுடன் நம்பிக்கை கொள்ளாத வரையிலும், குற்றவாளியை தண்டிப்பவனும், இறையச்சம் உடையவருக்கு முடிவிலா மகிழ்ச்சி அளிப்பவனுமாகிய இறைவன் இருக்கின்றான் என்பதை ஒரு முழு உறுதியுடன் அறியாத வரையிலும் மரணத்தை விளைவிக்கும் பாவத்தின் விஷத்திலிருந்து ஒருவர் தப்பித்துக் கொள்ள முடியாது. ஒன்றை உபயோகிப்பதால் மரணமே சம்பவிக்கும் என்பதை நம்புகிற ஒருவர் அதனை பயன்படுத்துவதில்லை என்பது பொதுவான அனுபவமாகும். உதாரணமாக எவரும் அறிந்து கொண்டே விஷத்தை விழுங்குவதில்லை. எவரும் வேண்டு -மென்றே ஒரு புலியின் முன் சென்று நிற்பதில்லை. எவரும் வேண்டுமென்றே ஒரு பாம்புப் புற்றினுள் தன் கையை நுழைப்பதில்லை. அப்படியிருக்க, ஒருவர் வேண்டுமென்றே பாவம் செய்வது ஏன்? காரணம் என்னவெனில் நாம் கூறியுள்ள மற்ற விஷயங்களில் அவர் கொண்டுள்ள நிச்சய உறுதி இந்த விஷயத்தில் அவரிடம் இல்லை. எனவே இறைஇருப்பின் மீதான நிச்சய உறுதியை பெற்றுக் கொள்வதே ஒருவரது தலையாய கடமையாகும். அவர் ஒரு மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும். அதன் மூலமாக அவர் இறைவனுக்கு அஞ்சி பாவத்தை விட்டு விலகுவதற்கு ஏதுவான நிச்சய உறுதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இத்தகைய நிச்சய உறுதியை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியம்? வெறும் கதைகளால் இதைப் பெற்றுக் கொள்ள முடியாது. வெறும் வாதங்களால் இதனைப் பெற்றுக் கொள்ள முடியாது. நிச்சய உறுதியை பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி மீண்டும் மீண்டும் அவனுடன் உரையாடும் அனுபத்தை பெறுவது அல்லது அவனது அசாதாரணமான அடையாளங்களை காண்பது அல்லது இத்தகைய அனுபவம் பெற்ற ஒருவரின் அண்மையை பெறுவதே ஆகும். (நஸீமே தாவத், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 447-448)

மார்க்கத்தின் குறிக்கோள் என்னவெனில் மனிதன் அவனது இச்சைகளிலிருந்து விடுதலை பெறுவதும்




இறைவனின் இருப்பின் மீதும் அவனது முழுமையான பண்புகள் மீதும் உறுதியான நம்பிக்கை கொள்வதன் மூலமாக எல்லாம் வல்ல இறைவனுடன் ஒரு தனிப்பட்ட அன்பை உருவாக்கிக் கொள்வதும் ஆகும். இந்த இறை அன்பே மறுமையில் பல்வேறு வடிவங்களில் சுவர்க்கமாக தோற்றமளிக்கிறது. உண்மையான இறைவனை அறியாமல் இருப்பதும், அவனை விட்டு விலகி இருப்பதும், அவனுடன் அன்பு கொள்ளாமல் இருப்பதுமே மறுமையில் பல்வேறு வடிவங்களில் நரகமாகத் தோற்றமளிக்கிறது. எனவே உண்மையான குறிக்கோள் அவனிடம் முழுமையான நம்பிக்கை கொள்வதாகும். இப்பொது எழும் கேள்வி என்னவெனில் எந்த மார்க்கம், எந்த வேதநூல் இந்த தேவையை நிறைவு செய்கிறது என்பதாகும். இறைவனுடன் உரையாடல் என்னும் கதவு மூடப்பட்டு விட்டதென்றும், நிச்சய உறுதியைப் பெற்றுக் கொள்ளும் வழிகள் முத்திரையிடப்பட்டு விட்டன என்றும் பைபிள் கூறுகிறது. (அவ்வாறாயின்) எதுவெல்லாம் நடைபெற வேண்டுமோ அவை முந்தைய காலத்தில் நடைபெற்று விட்டன. எதிர்காலத்தில் எதுவும் நடைபெறாது. மரணித்து விட்ட ஒரு மார்க்கத்தால் என்ன பயன் இருக்க முடியும்? மரணித்து விட்ட ஒரு வேதநூலிருந்து நாம் என்ன பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்? மரணித்து விட்ட ஓர் இறைவனால் என்ன அருளை வழங்க முடியம்? (சஷ்மயே மஸீஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 352-353)

ஒரு மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதன் நோக்கம் என்னவெனில், தன்னிறைவு பெற்றவனும் தனது படைப்பின் தேவையோ அல்லது அதன் வணக்கத்தின் தேவையோ அற்றவனுமாகிய இறைவன், நம்மிடம் திருப்தி கொள்வதும், அவனது அருள் மற்றும் கருணையின் வாயிலாக நமது உள்ளார்ந்த கறைகளும், துருக்களும் கழுவப்பட்டு நமது உள்ளங்களில் நிச்சய உறுதியும் அறிவும் நிரம்ப பெறுதலுமே ஆகும். ஒரு மனிதனின் சொந்தத் திட்டங்களால் இதனைப் பெற்று விட முடியாது. எனவேதான் மகிமைமிக்க இறைவன் முக்கியமாக தன் சொந்த இருப்பையும் பிறகு ஆன்மாக்கள், பருப்பொருட்கள், மலக்குகள், சுவர்க்கம், நரகம், உயிர்தெழுதல், நபித்துவம் போன்ற தனது படைப்புகளின் அதிசயங்களையும் மறைத்து வைத்துக் கொண்டு அதே நேரத்தில் அவற்றின் ஒரு பகுதியை பகுத்தறிவின் வாயிலாக வெளிப்படுத்தியவனாக இந்த அனைத்து இரகசியங்களையும் நம்புவதற்காக தனது அடியார்களை நியமித்தான். (சுர்மா செஷ்மா ஆர்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 2)

### உண்மையான மார்க்கத்தை அறிந்து கொள்ளுதல்:

ஓர் உண்மையான மார்க்கத்தை அறிந்து கொள்வதற்கு மூன்று விஷயங்களைக் கவனிப்பது அவசியமாகும்.

1) முதலாவதாக, இறைவனைப் பற்றி அந்த மார்க்கத்தின் போதனை என்ன என்பதை ஒருவர் பார்க்க வேண்டும். அதாவது, ஏகத்துவம், வல்லமை, அறிவு, முழுமைத்தன்மை, மகிமை, தண்டனை, கருணை போன்ற இறை பண்புகளைக் குறித்து மார்க்கம் என்ன கூறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

2) இரண்டாவதாக, தன்னைக் குறித்தும் மனித நடத்தையை குறித்தும் மார்க்கம் என்ன கூறுகிறது என்பதை உண்மையைத் தேடும் ஒருவர் கண்டறிவது அவசியமாகும். அதன் போதனைகளில் மனித உறவுகளை சீர்குலைக்கும் அம்சம் ஏதேனும் இடம்பெற்றிருக்கிறதா அல்லது அடக்கம் மற்றும் கண்ணியத்திற்கு மாற்றமான வழிகளில் இட்டுச் செல்லக் கூடியவையாக இருக்கின்றதா அல்லது இயற்கைச் சட்டத்திற்கு மாற்றமானதாகவோ, ஏற்றுக் கொள்ள முடியாத -தாகவோ அல்லது அபாயம் விளைவிப்பவையாகவோ இருக்கிறதா எனப் பார்க்க வேண்டும். மேலும் ஒழுங்கீனமான நிலைகளை சமாளிக்கத் தேவையான முக்கிய போதனைகள் விடப்பட்டுள்ளதா என்பதையும் பார்க்க வேண்டும். மேலும் அந்த மார்க்கம் இறைவனை ஒரு பெரும் கொடையாளனாக முன்வைக்கிறதா, அவனுடன் தனிப்பட்ட நேசத்தை உருவாக்கிக் கொள்ளக் கூறுகிறதா, இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச் செல்லும் கட்டளைகளை அது கொண்டிருக்கிறதா, கவனமற்ற தன்மையிலிருந்து நினைவூட்டலின் பக்கம் இட்டுச் செல்கின்றதா என்பதையும் பார்க்க வேண்டும்.

3) மூன்றாவதாக, ஒரு மார்க்கம் முன் வைக்கின்ற இறைவன் கதைகள் மற்றும் கற்பனைகளின் அடிப்படையில் நம்பப்படுபவனாகவோ, மரணித்தவனைப் போன்றோ இல்லை என்பதை குறித்து உண்மையைத் தேடுபவர் திருப்தி கொள்வது அவசியமாகும். மரணித்தவனைப் போன்ற ஓர் இறைவனை நம்புவதும், அவன் தன்னைத்தானே வெளிப்படுத்தாத நிலையில் அவன் மீது ஒருவர் சுயமே



நம்பிக்கை கொள்வதும் அத்தகைய இறைவனை நன்றிக்கடன் பட்டவனாக ஆக்கி விடுகிறது. எந்த இறைவனின் ஆற்றல்கள் உணரப்படவில்லையோ, எவன் தனது சுய இருப்பின் அடையாளங்களை தானே வெளிப்படுத்தவில்லையோ, அத்தகைய இறைவன் மீது நம்பிக்கை கொள்வது பயனற்ற -தாகும். (நஸீமே த:்வத், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 373-374)

எந்த மார்க்கம் இறைவன் புறமிருந்து வந்திருப்பதாக வாதிக்கின்றதோ, அது அதற்கான அடையாளங்களை வெளிப்படுத்த வேண்டும். அது தன்னகத்தே இறைவனின் முத்திரையைப் பெற்றிருக்க வேண்டும். இஸ்லாம் இத்தகைய ஒரு மார்க்கமாகும். அதாவது மறைவாக இருக்கும் இறைவன் இந்த மார்க்கத்தின் மூலம் அறியப்படுகிறான். இந்த மார்க்கத்தை உண்மையாகப் பின்பற்றுபவர்களிடத்தில் அவன் தன்னை வெளிப்படுத்துகிறான். ஓர் உண்மையான மார்க்கம் இறைவனின் கரங்களால் ஆதரவளிக்கப்படுகிறது. மேலும் இத்தகைய மார்க்கத்தின் மூலம் இறைவன் தான் இருப்பதாக தன்னை வெளிப்படுத்துகிறான். கற்பனை கதைகளையே சார்ந்திருக்கும் மார்க்கங்கள் சிலை வணக்கத்தின் ஒரு வடிவமே ஆகும். இத்தகைய மார்க்கங்கள் உண்மையின் ஆன்மாவைப் பெற்றிருப்பதில்லை. இறைவன் முன்பு இருந்ததைப் போன்றே உயிருடன் இருக்கின்றான் என்றால், அவன் இல்லாததைப் போன்று தொடர்ந்து மவுனமாக இருப்பதற்கு காரணம் ஏதுமில்லை. அவன் இந்தக் காலத்தில்

பேசுவதில்லை, என்றால், அதைப் போன்றே அவன் செவியுறுவதுமில்லை என்பதுவும் நிச்சயமாகி விடும். வேறு வார்த்தைகளில் கூறப்போனால், தற்போது அவன் ஒன்றுமில்லை என்றாகி விடும். இந்தக் காலத்திலும் கூட இறைவன் செவியுறவும் பேசவும் செய்கின்றான் என்று எந்த மார்க்கம் நிரூபிக்குமோ, அந்த மார்க்கம் உண்மையான மார்க்கமாகும். ஓர் உண்மையான மார்க்கத்தில் இறைவன் பேசுவதன் மூலமாக தனது இருப்பை உறுதிப்படுத்துகிறான்.

இறைவனைத் தேடுவது கடினமான ஒன்றாகும். இது உலகத் தத்துவவாதிகள் மற்றும் அறிஞர்களின் வேலை அல்ல. வானங்களையும் பூமியையும் கூர்ந்து நோக்கும் போது, அவற்றின் ஒழுங்குத்தன்மை இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தவன் ஒருவன் இருக்க வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுகிறது. இருப்பினும், அத்தகைய ஒரு படைப்பாளன் உண்மையிலேயே இருக்கிறான் என்பதற்கு அது சான்று அல்ல. இருக்க வேண்டும் என்பதற்கும் இருக்கிறான் என்பதற்கும் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. அவனது இருப்பை உறுதிப்படுத்துகின்ற ஒரு வேதநூல் திருக்குர்ஆனே ஆகும். அது இறைவனைத் தேடுவதைத் தூண்டுவது மட்டுமல்லாமல் அவனை வெளிப்படவும் வைக்கின்றது. திருக்குர்ஆனைத் தவிர மறைந்திருக்கும் இறைவனை வெளிப்பட வைக்கின்ற வேறெந்த நூலும் இல்லை. (சஷ்மையே மஸீஹ் ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 351-352)



மார்க்கம் என்பதன் பொருள் மார்க்கத்தின் பெயரில் ஏசிப் பேசுவதும் கடும் சொற்களை பயன்படுத்துவதும் அல்ல. இது தொடர்பாக எவரும் உள்ளத்தின் தீமைகளை நசுக்குவதன் பக்கமோ அல்லது நேசத்திற்குரியவனிடம் உண்மையான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதன் பக்கமோ கவனம் செலுத்துவதில்லை. ஒரு தரப்பினர் மற்றொரு தரப்பின் மீது நாய்களைப் போன்று தாக்குதல் தொடுக்கின்றனர். மார்க்கத்தின் ஆதரவாக ஒவ்வொரு வகையான தீய நடத்தைகளும் வெளிப்படுத்தப்படுகிறது. இத்தகைய மக்கள் தாம் உலகிற்கு வந்தது ஏன் என்பதையும் தமது வாழ்வின் உண்மையான நோக்கம் என்ன என்பதையும் அறிவதில்லை. அவர்கள் தொடர்ந்து குருடர்களாகவும் தீய இயல்பு கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். தமது மதவெறி கொண்ட உணர்வுகளுக்கு மார்க்கத்தின் பெயரைச் சூட்டுகின்றனர். அவர்கள் தனது தீய நடத்தையை வெளிப்படுத்தி தமது கட்டுப்பாடற்ற நாவை ஒரு கற்பனை இறைவனுக்கு ஆதரவாக பயன்படுத்துகின்றனர். அந்த இறைவனின் இருப்பிற்கோ அவர்களிடம் எந்த சான்றும் இல்லை. உயிருள்ள இறைவனை வணங்குவதை போதிக்காத மார்க்கத்தினால் என்ன பயன் இருக்க முடியும். அவர்கள் முன்வைக்கின்ற இறைவன் ஒரு பிணத்தைக் காட்டிலும் சிறந்தவன் அல்லன். அவன் பிறரது ஆதரவினாலேயே நடக்கிறான். அந்த ஆதரவு திரும்பப் பெறப்பட்டால் அவன் தரையில் விழுந்து விடுகின்றான். மதவெறியைத் தவிர வேறெதையும் இத்தகைய மார்க்கத்தினால் அவர்கள் பெறுவதில்லை. மிகச் சிறந்த பண்புகளான இறைவன் மீதான அச்சத்தையும் மனித குலத்தின் மீதான அனுதாபத்தையும் அவர்கள் முற்றிலும் இழந்து விடுகின்றனர். (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5 , ரூஹானி கஸாயின் தொகுதி 21 பக்கம் 28)

## இஸ்லாம் உண்மையான மார்க்கமாகும்:

நினைவில் கொள்ளுங்கள்! இறைவன் புறமிருந்து வந்திருப்பதாக வாதிடும் ஒரு மார்க்கம் தனது உண்மையை நிலைநாட்டுவதற்காக தனது சிறப்பினை இரண்டு அம்சங்களில் நிரூபித்தாக வேண்டும். முதலாவதாக, அது எந்த அளவுக்கு பரந்ததாகவும், முழுமையானதாகவும், நிறைவானதாகவும் இருக்க வேண்டுமெனில், அதன் கொள்கைகளும், போதனைகளும், கட்டளைகளும் எந்த அளவுக்கு எல்லாவிதமான குறைபாடுகளை விட்டும் நீங்கியதாக இருக்க வேண்டுமெனில், மனித அறிவு இதை விட சிறந்த ஒன்றை முன்வைக்கவோ, இதில் விடுபட்ட ஒன்றை சுட்டிக்காட்டவோ இயலாத ஒன்றாக இருக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் இது மற்றெல்லா மார்க்கங்களை விடவும் முன் செல்ல வேண்டும். திருக்குர்ஆன் இது குறித்து இவ்வாறு வாதிக்கின்றது:


اَلۡیَوۡمَ اَکۡمَلۡتُ لَکُمۡ دِیۡنَکُمۡ وَاَتۡمَمۡتُ عَلَیۡکُمۡ
نِعۡمَتِیۡ وَرَضِیۡتُ لَکُمُ الۡاِسۡلَامَ دِیۡنًا ؕ

இன்று நான் உங்களுக்காக மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்க -மாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன். (5:4)

இறைவன் நம்மை இஸ்லாம் என்னும் சொல்லில் பொதிந்துள்ள உண்மைக்கு ஏற்ப நடந்து கொள்ளுமாறு கூறுகிறான் என்பது இதன் பொருளாகும். இதிலிருந்து திருக்குர்ஆன் முழுமையான போதனையை உள்ளடக்கி இருக்கிறது என்றும் திருக்குர்ஆன் அருளப்பட்ட காலமே இத்தகைய முழுமையான போதனை அருளப்பட வேண்டிய காலமாக இருந்தது என்றும் தெளிவாகிறது. திருக்குர்ஆன் மட்டுமே இந்த வாதத்தை முன்வைக்க உரிமை பெற்றுள்ளது. வேறு எந்த வேத நூலும் இத்தகைய ஒரு வாதத்தை முன்வைக்கவில்லை. தவ்ராத்தும் இஞ்சீலும் இந்த வாதத்திலிருந்து தவிர்ந்து கொள்கின்றன. மாறாக, தவ்ராத்தில் இறைவனது கட்டளையாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்களது சகோதரர்களிலிருந்து எழும்பப் பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன். நான் அவருக்கு கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்கு சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்கு செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன் (உபாகமம் 1)

பின் வரும் காலங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு தவ்ராத் போதுமானதாக இருப்பின், மற்றொரு




தீர்க்கதரிசியின் வருகை அவசியமற்றதாகி விடும். அவருக்கு செவி கொடுப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே இஞ்சீலும் தனது போதனைகள் முழுமையானதும் அனைத்தையும் உள்ளடக்கியதும் ஆகும் என்று எங்குமே கூறவில்லை. மாறாக, அதில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் இவ்வாறு உள்ளது.

இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்கு சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். (யோவான் 16:12-13)

இவ்வாறாக மோசே தவ்ராத்தின் முழுமையற்ற தன்மையை ஒப்புக்கொண்டு பின்னால் வரவிருக்கின்ற ஒரு தீர்க்கதரிசியின் போதனைகள் பக்கம் கவனமூட்டினார். அதைப்போன்றே இயேசு தனது போதனைகளின் முழுமையற்ற தன்மையை ஒப்புக்கொண்டவாறு, முழுமை-யான போதனைகள் வெளிப்படுத்துவதற்கான காலம் இன்னும் வரவில்லை என்றும், சத்திய ஆவியானவர் வரும்போது அவர் முழுமையான போதனைகளை கொண்டு வருவார் என்றும் கூறினார். இதற்கு நேர்மாறாக திருக்குர்ஆன், தவ்ராத் மற்றும் இஞ்சீலைப் போன்று முழுமைப்படுத்துவதற்கு மற்றொரு வேதநூலை குறிப்பிடாமல், தனது போதனைகளின் முழுமைத்-தன்மையை இந்த வார்த்தைகளில் அறிவிக்கின்றது.

இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன் (5:4)

இதில் இஸ்லாத்திற்கு ஆதரவாக மிகப்பெரும் சான்று உள்ளது. அதாவது இஸ்லாம் அதன் போற்றத்தக்க போதனைகளின் மூலம் ஏனைய ஒவ்வொரு மார்க்கத்தின் மீதும் மேலோங்கியுள்ளது. அதன் போதனைகளின் முழுமைத் தன்மையைப் பொருத்தவரை எந்தவொரு மார்க்கமும் அதனுடன் போட்டியிட இயலாது. வேறு எந்த மார்க்கமும் பங்கு பெறாத, இஸ்லாத்திற்கு சொந்தமான, மேலும் அதன் உண்மையை முழுமையாக உறுதிப்படுத்துகிற இரண்டாவது வகை வெற்றி என்னவெனில், இஸ்லாம் உயிருள்ள அருட்களையும் அற்புதங்களையும் வெளிப்படுத்துவ-தாகும். பிற அனைத்து மார்க்கங்களும் இவற்றிலிருந்து காலியாகவே உள்ளன. இஸ்லாம் வெளிப்படுத்தும் அடையாளங்கள், பிற மார்க்கங்கள் மீதான அதன் மேன்மையை நிலைநாட்டுவது மட்டுமன்றி. முழுமையான ஒளியின் மூலம் மக்களின் உள்ளங்களைக் கவரவும் அதற்கு வழிகோலுகிறது. நாம் மேலே குறிப்பிட்ட இஸ்லாத்தின் முதல் அம்சமாகிய அதன் போதனைகளின் முழுமைத்தன்மை என்பது, இஸ்லாம் இறைவனால் அருளப்பட்ட உண்மையான மார்க்கம் என்ற கருத்தினை நிலைநாட்ட போதுமான சான்று ஆகாது. காழ்ப்புணர்ச்சி கொண்ட, தொலைநோக்கு பார்வை இல்லாத எதிரி ஒருவர் முழுமை பெற்ற போதனையாகவே இருப்பினும் அது இறைவன் புறமிருந்து வராமல் இருப்பதற்கு சாத்தியம் உண்டு எனக் கூறலாம். இந்த முதல் அம்சம் உண்மையை தேடும் அறிவுள்ள ஒருவரை பல்வேறு சந்தேகங்களிலிருந்து விடுவித்து உறுதிப்பாட்டிற்கு அருகில் கொண்டு வருகிறது. ஆனால் இரண்டாவது அம்சத்துடன் இணைந்திருக்காத வரை அது விஷயத்தை முடிவாகவும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையிலும் நிலைநாட்ட முடியாது. இந்த இரண்டு அம்சங்களும் இணைந்துவிடும்போது உண்மையான மார்க்கத்தின் ஒளி அதன் முழுமைத்தன்மையை அடைந்து விடுகிறது.

ஓர் உண்மையான மார்க்கம் ஆயிரக்கணக்கான சான்றுகளையும் ஒளிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எனினும் இவ்விரண்டு அம்சங்களும் உண்மையை தேடுகின்ற ஒருவரின் உள்ளத்திற்கு உறுதிப்பாட்டினை வழங்கவும். உண்மையை மறுக்கின்றவர்கள் திருப்தி அடையும் அளவிற்கு விஷயத்தை தெளிவுபடுத்தவும் போதுமானவையாகும். இதற்கு மேலும் எதுவும் தேவையில்லை. இஸ்லாத்தின் உண்மைக்கு ஆதரவாக மூவாயிரம் சான்றுகளை பராஹீனே அஹ்மதிய்யாவில் குறிப்பிட வேண்டும் என நான் ஆரம்பத்தில் எண்ணியிருந்தேன். ஆனால் பின்னர் சிந்தித்து பார்த்தபோது, இவ்விரண்டு அம்சங்களும் ஆயிரக்கணக்கான சான்றுகளுக்கு ஈடானவை என்பதை உணர்ந்தேன். எனவே இறைவன் எனது திட்டத்தை மாற்றும்படி செய்தான். (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக் 3-6)

எல்லாம் வல்ல இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாதத்தினை விளக்கிச் சொல்லாமல் விட்டு விடவில்லை. அவர்கள் ஒரு சூரியனைப் போன்று வந்தார்கள். ஒவ்வொரு கோணத்திலும் தமது ஒளியினை வெளிப்படுத்தி-னார்கள். இந்த உண்மையான சூரியனை விட்டும் விலகிச் செல்பவர் எந்த நன்மையையும் பெறமாட்டார். இத்தகைய ஒருவர் நன்னம்பிக்கை உடையவர் என்று நம்மால் கூற முடியாது. எவர் தொழுநோயால் பீடிக்கப்பட்டுள்ளாரோ எவரது உறுப்புகள் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனவோ அவர் தன்னை முழுமையாக ஆரோக்கியம் பெற்றவரென்றும் தனக்கு சிகிச்சை தேவையில்லையென்றும் கூற முடியுமா? அப்படி அவர் கூறினால் அவர் நன்னம்பிக்கை கொண்டவர் என நம்மால் கூறமுடியுமா? நல்லெண்ணத்துடன் எவ்வளவு தான் உலக விவகாரங்களில் முயற்சி செய்வது போன்று முயற்சி செய்த பின்னரும் கூட இஸ்லாத்தின் உண்மையை தன்னால்

கண்டறிய முடியவில்லை என இத்தகைய ஒருவர் கூறினால். பின்னர் அவரது விஷயம் இறைவனிடம் உள்ளது. ஆனால் இப்படிப்பட்ட ஒருவரை நாம் கண்டதில்லை. பகுத்தறிவும் நீதி உணர்வும் கொண்ட ஒருவர் இஸ்லாத்திற்கு மாற்றமான ஒரு மார்க்கத்தை தேர்ந்தெடுப்பது சாத்தியமற்றதே. முட்டாள்-தனமான அறிவற்ற மக்கள் தமது சுயவிருப்பங்களினால் இறைவனின் ஏகத்துத்தின் மீது நம்பிக்கை கொள்வதே போதுமென்றும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்ற தேவையில்லையென்றும் கருதி விடுகின்றனர். ஆனால் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவெனில் ஒரு நபியே ஏகத்துவ நம்பிக்கையின் தாயாக விளங்குகிறார். அவரே அதனைப் பெற்றெடுத்து இறை இருப்பின் பக்கம் கவனத்தை திருப்புகிறார். அந்த வல்லமை மிக்க இறைவனை விட எவர்தான் உண்மையை சிறப்பாக விளக்க முடியும்.

அவன் வானத்தையும் பூமியையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையை நிரூபிக்கும் அடையாளங்களை கொண்டு நிரப்பினான். மேலும் இக்காலத்தில் அவன் என்னை அனுப்பி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையை நிரூபிப்பதற்காக ஆயிரக்கணக்கான அடையாளங்களை பெருமழையைப் போன்று வெளிப்படுத்தினான். பிறகு உண்மையை முற்றிலும் விளக்குவதில் என்ன குறைதான் எஞ்சியுள்ளது. மறுக்கின்ற உணர்வு படைத்தவர்கள் ஏற்றுக்கொள்ளும் வழியைப்பற்றி ஏன் சிந்திப்பதில்லை? இரவில் தன்னால் பார்க்க முடியும் என்று பாசாங்கு செய்பவர், முழு வெளிச்சத்தைக் கொண்ட பகலில் ஏன் பார்ப்பதில்லை? உண்மையில், ஏற்றுக் கொள்வதின் வழி மறுப்பதின் வழியை விட மிகவும் எளிதானதேயாகும்.

எவரது சிந்தனைசக்தி குறைபாடு கொண்டதாக இருக்கிறதோ, எவரது மன ஆற்றல்கள் இயல்பானவையாக இல்லையோ அவரது விஷயத்தை இறைவனிடம் விட்டுவிட வேண்டும். இத்தகைய நபரைக் குறித்து நாம் ஒன்றும் கூறுவதிற்கில்லை. அவர் இளம்பிராயத்தில் மரணித்து விடும் சிறுவர்களைப் போன்றவர் ஆவார்.

ஆனால் நிராகரிக்கும் ஒரு தீயவரைப் பொறுத்தவரை, அவர் நல்லெண்ணத்துடனே செயல்படுவதாக தன்னைத்தானே சமாதானம் செய்து கொள்ள முடியாது. ஏகத்துவம், நபித்துவம் போன்ற கொள்கைகளைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு அவர் மனதிறன் கொண்டவரா என பார்க்க வேண்டும். அவற்றை புரியும் திறன் அவருக்கு இருந்தும், தப்பெண்ணத்தின் காரணத்தால் அவர் மறுக்கிறார் எனில், அவரை மன்னித்து விட முடியாது. ஒருவர் சூரிய ஒளியைப் பார்த்தவாறே இது பகல் அல்ல, இரவுதான் எனப் பிடிவாதம் கொண்டால், அவரை நாம் மன்னித்து விட முடியுமா? அதைப் போன்றே, எவர்கள் தவறான சிந்தனைப் போக்கை வேண்டுமென்றே கைக்கொண்டு இஸ்லாத்தின் சார்பாக முன்வைக்கப்படும் சான்றுகளை மறுக்கவியலாதவர்களாக இருப்பார்களோ அவர்களை நாம் மன்னித்து விட முடியாது. இஸ்லாம் ஓர் உயிருள்ள மார்க்கமாகும். உயிருள்ளதையும் மரணித்ததையும் பிரித்தறிய தெரியும் ஒருவர், இஸ்லாத்தை விட்டு விட்டு மரணித்து விட்ட ஒரு மார்க்கத்தை எப்படி ஏற்றுக் கொள்வார்? (ஹகீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22,பக் 180-181)

### இஸ்லாத்தை பின்பற்றுவதனால் ஏற்படும் படிப்படியான வளர்ச்சி:

இறைவனின் தூய வார்த்தை குறித்து நான் சிந்தித்த போது, அதன் போதனைகள் மூலம் மனிதனது இயல்பான நிலைகளை சீர்திருத்தி உயர் ஆன்மிகத் தகுதிகள் பக்கம் அவனை உயர்த்த அது முனைகிறது என்பதை அறிந்தேன். முதலாவதாக, இறைவன் மனிதனுக்கு நடத்தையின் ஆரம்ப விதிகளைக் கற்றுக் கொடுக்கவும், அதன் மூலம் அவனை தான் தோன்றித்தனமான மிருக நிலையிலிருந்து மாற்றி, பண்பாடு, நாகரிகம் என்று அழைக்கப்பட கூடிய ஆரம்ப கட்ட ஒழுக்க நிலைகளை அவனுக்கு வழங்கவும் விரும்புகிறான். பின்னர் அவனுக்கு பயிற்சி அளித்து ஆரம்ப கட்ட ஒழுக்க நிலையிலிருந்து ஓர் உயர் தர ஒழுக்க நிலைக்கு உயர்த்துகிறான். இவை அனைத்துமே இயல்பான நிலைகளின் சீர்திருத்தம் என்ற ஒரு படித்தரமே ஆகும். இங்கு தென்படும் வித்தியாசம் தரத்தினால் ஏற்படும் வித்தியாசம் மட்டுமே ஆகும். மனிதன் ஒரு குறைந்த ஒழுக்க நிலையிலிருந்து ஓர் உயர்ந்த ஒழுக்கநிலை வரை செல்வதற்கு ஏற்றவாறே ஞானமிக்க இறைவன் ஒழுக்க அமைப்பை ஏற்படுத்தியுள்ளான். சீர்திருத்தத்தின் மூன்றாவது நிலை என்னவென்றால், மனிதன் தன்னைப் படைத்தவனின் அன்பையும் திருப்தியையும் பெற்றுக் கொள்வதும் அவனது முழு இருப்புமே இறைவனுக்காக ஆகி விடுதலுமே ஆகும். இந்த நிலையில்தான் முஸ்லிம்களின் மார்க்கத்திற்கு இஸ்லாம் என பெயரிடப்பட்டுள்ளது. அதன் பொருள் என்னவெனில் இறைவனுக்காகவே முற்றிலும் ஆகி விடுவதும் எதனையும் பின்னால் விட்டு வைக்காதிருப்பதுமே ஆகும். (இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம். ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 324)

(தொடரும்...)

ஓர் உண்மையான மார்க்கத்தை அறிந்து கொள்வதற்கு மூன்று விஷயங்-களைக் கவனிப்பது அவசியமாகும்.

முதலாவதாக, இறைவனைப் பற்றி அந்த மார்க்கத்தின் போதனை என்ன என்பதை ஒருவர் பார்க்க வேண்டும்.

இரண்டாவதாக, தன்னைக் குறித்தும் மனித நடத்தையை குறித்தும் மார்க்கம் என்ன கூறுகிறது என்பதை உண்மையைத் தேடும் ஒருவர் கண்டறிவது அவசியமாகும்.

மூன்றாவதாக, ஒரு மார்க்கம் முன் வைக்கின்ற இறைவன் கதைகள் மற்றும் கற்பனைகளின் அடிப்படையில் நம்பப்படுவ-னாகவோ, மரணித்தவனைப் போன்றோ இல்லை என்பதை குறித்து உண்மையைத் தேடுபவர் திருப்தி கொள்வது அவசியமாகும்.

# புதிய முபல்லிக்மார்களுக்குப் பிரியா விடை கொடுக்கும் நிகழ்ச்சி



புனித காதியான் தாருல் அமானில், பிப்ரவரி 13, 2025 அன்று வியாழக்கிழமை இஷா தொழுகைக்குப் பிறகு, மதிப்பிற்குரிய டாக்டர் நிஸார் முஹம்மது சாஹிப் அவர்கள் தலைமையில் நிகழ்ச்சி துவங்கியது. இந்த நிகழ்ச்சியில், ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானிலிருந்து தேர்ச்சி பெற்று, பயிற்சி காலம் நிறைவடைந்து இவ்வாண்டு (2025) செயல்களத்துக்கு செல்லவிருக்கும் புதிய முபல்லி.ஃக்மார்களான சென்னையைச் சேர்ந்த மதிப்பிற்குரிய M.J. தன்வீர் அஹ்மது சாஹிப் அவர்கள் மற்றும் தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட, தற்போது காதியானில் வசிக்கும் மதிப்பிற்குரிய N. நாஷித் அஹ்மது சாஹிப்அவர்கள் ஆகிய இருவருக்கும் பிரியா விடை கொடுக்கப்பட்டது.



இந்த நிகழ்ச்சியில், புத்தாக்க வகுப்புக்-காக காதியான் தாருல் அமானுக்கு வருகை தந்திருந்த தமிழ்நாட்டு முரப்பிமார்களும், காதியானில் பணிபுரியும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வாழ்வை அர்ப்பணித்த மக்களும், ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானில் கல்வி பயின்று கொண்டிருக்கும் தமிழ்நாட்டு மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

ஜமாஅத் வழக்கப்படி திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி துவங்கியது. அதையடுத்து அறிமுகவுரையைத் தொடர்ந்து, புதிய முரப்பிமார்கள் இருவரும் தமது கருத்தைப் பகிர்ந்து கொண்டார்கள். அதில் அவர்கள் இருவரும் ஜாமிஆவில் தற்போது கல்வி பயின்று வரும் தம் இளையவர்களுக்கு சில அறிவுரைகளையும் கூறினார்கள். இதைத் தொடர்ந்து, காதியான் நஸாரத் நஷ்ரோ இஷாஅத் அலுவலகத்தின் தமிழ்த்துறை பொறுப்பாளரான மவ்லவி A.P.A தாரிக் அஹமது சாஹிப் அவர்கள் ஜாமிஆவில் கல்வி பயின்று செயல்களத்துக்கு செல்லும் புதிய முரப்பிமார்களுக்குக் குறிப்பாகவும், வாழ்வை அர்ப்பணித்தவர்கள் அனைவருக்கும் பொதுவாகவும் சில வழிகாட்டல்களை வழங்கினார்கள். அதில் குறிப்பாக குறித்த நேரத்தில் தொழுகையை நிலைநாட்டுவது குறித்து அறிவுறுத்தினார்கள்.



பிறகு, அனைவர் சார்பாக-வும் புதிய முரப்பிமார்களுக்கு ஒரு சிறு நினைவுப் பரிசைக் கூட்டத்தின் தலைவர் அவர்கள் வழங்கி-னார்கள். பிறகு, துஆவுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது. இதை அடுத்து வருகை தந்திருந்த அனைவருக்கும் இரவு உணவுக்-கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது - அல்ஹம்துலில்லாஹ்.

(அறிக்கை - இப்னு வஸீம், காதியான்)